# விடுதலைப்புலிகள்

குரல்: 85 ஆவணி - புரட்டாதி, 1998 அன்பளிப்பு 5/-


உள்ளே

- இராணுவக் கற்பனைகளும் புலிகளின் யதார்த்தங்களும்
- சுதந்திர எழுச்சிகொள்ளும் அனைத்துலக ஈழத்தமிழினம்
- இலக்கைத்துவக்கி உயிரேந்தி சென்ற தேசத்தின்புயல்கள்
- தம்மைத் தாமே முற்றுகையிடுபவர்கள்
- யாழ்ப்பாண இடப்பெயர்வு - ஒரு வரலாற்றுச் சம்பவம் களங்கப் படுத்தப்படுகிறது.
- உலைக்களம்

# செம்மணிப் புதைகுழிகளைத்தோண்ட இராணுவ உயர்பீடம் எதிர்ப்பு

**கிருசாந்தி கொலை வழக்கில் மரண தண்டனைத் தீர்ப்பைப் பெற்ற இராணுவச்சிப்பாய், புதைகுழி இரகசியத்தைக் கக்கியபின்னர், செம்மணி என்ற பெயர் தமிழர்நிலத்தினது "சிலுவையூன்றாச் சவக்காலை"களின் சின்னமாகிவிட்டது.**

வெளிநாட்டு மனித உரிமை ஆர்வலர்களது தலையீட்டினால் புதைகுழிகள் நிறைந்து காணப் படுவதாக சிங்களச் சிப்பாய் அடையாளம் காட்டிய செம் மணிப்பகுதியை கிளறி ஆராய வேண்டும் என்ற குரல் ஓங்கி ஒலித்து வருகின்றது.

எனினும், இந்தப் புதைகுழிப் 'போஸ்மோட்டத்' திட்டத்தை சிங்கள இராணுவ உயர்பீடம் தீவிரமாக எதிர்த்து வருகின் றது.

இப்படுகொலை விவகாரத்து டன் சுடாநாட்டு இராணுவ தலைமைப்பீடமும் - மற்றும் பல இராணுவ உயர் அதிகாரி களும் சம்பந்தப்பட்டுள்ளதால் செம்மணியைத் தோண்டி- உண்மைகளைக் கிளறி எடுப் பதை இராணுவம் தீவிரமாக எதிர்க்கின்றது.

செம்மணி தோண்டப்பட்டு- விசாரணைகள் முடுக்கிவிடப்பட் டால் இராணுவத்திற்குள் பதட் டம் எழலாம் என்றும் - இத னால் படையினரின் 'போர் உறுதி' சிதைந்துபோகலாம் என்றும்- இது அரசாங்கத்தின் போர்க்கொள்கையைப் பாதிக்க லாம் என்றும் படைத்தலைமை வாதிடுகின்றது.

இதேவேளை, போர்நாயகர்கள் என்றும்- திறமையான பாது காப்பு அதிகாரிகள் என்றும்- மக்கள் சேவகர்கள் என் றும் பெயர்சூட்டப்பட்டுள்ள பல சிங்களத் தளபதிகளின் 'கீர்த்தி,' செம்மணியைத் தோண்டினால் அழிந்துவிடும் என்று சந்திரிகா அரசாங்கமும் அஞ்சுகின்றது. இதனால் புதை குழி விவகாரத்தை ஆழப் புதைத்து விடவே அம்மையா ரும் விரும்புகின்றார்.

சிங்கள அரசைப் பொறுத்தள வில் புலிகளுடன் போர்செய்தல் என்பதுவும் - தமிழர்களைக் கொன்றொழித்தல் என்பதுவும் ஒன்றுதான். போர்க்களத்திலுள்ள தனது படையினருக்கான ஊக்கு விப்புச் சலுகைகளாக தமிழர் களைக் கொல்லும் உரிமையை - பாலியல் வல்லுறவுகொள்ளும் அனுமதியை - சொத்துக்களைச் சூறையாடும் உரிமையை அர சாங்கமும் மறைமுகமாக வழங் கியுள்ளது.



மேற்திசையின் முகம்நோக்கி காத்திருக்கும் புலிவீரன்..... கிளர்ந்தெழும் சூரியன் !

தமிழினஅழிப்பு என்பது சிங் களஅரசின் சித்தாந்தம் என்ப தால் தமிழர்மீதான இந்த அக் கிரமங்களை சிறிலங்காவின் எந்த ஒரு அரசாங்கமும் பொருட் படுத்துவதில்லை.

அறுபதாயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டுவிட்ட இந்த இரு பது ஆண்டுகால வரலாற்றில் தமிழர்வதைக்காக எந்த ஒரு படையினனும் தண்டிக்கப்பட்ட தில்லை. படையினரால் கொல் லப்படும் தமிழர்களை பிணப்பரி சோதனை செய்யாது - உடனடி யாக அழித்துவிடவேண்டும் என்று ஜே.ஆரின் ஆட்சியில் சட் டம் ஒன்று இருந்தது நினை வூட்டத்தக்கது. கிருசாந்தி கொலை விவகாரம் அரசாங்கத் தின் கைகளையும் மீறிச்சென்ற தனால், கொலைகாரர்கள் குற்ற வாளிகளாக்கப்பட்ட விபத்து சிறி லங்கா வரலாற்றில் நடந் துள்ளது.

செம்மணிப்புதைகுழிவிவகாரத் தில் வெளிநாட்டு மனித உரிமை அமைப்புகள் காட்டிய அக்க றையை- தமிழ்க்குழுக்கள் கிஞ்சித் தும் காட்டவில்லை. சந்திரிகா அரசாங்கத்திற்கு முட்டுக்கொ டுத்துக்கொண்டிருக்கும் தமிழ்க் குழுக்கள் நினைத்திருந்தால் இந்தப் புதைகுழி விவகாரத் தைவைத்தே சந்திரிகா அரசாங் கத்தைப் புதைத்திருக்கமுடியும். தமிழினப் படுகொலையை சட் டபூர்வமாக சர்வதேசசமூகத் திற்கு அம்பலப்படுத்திக்காட்டி- சந்திரிகா அம்மையாரின் கொலை ஆட்சியை உலகஅரங்கில் நிரூ பித்திருக்க முடியும்.

ஆனால், அவர்கள் அதைச் செய்யவில்லை. மாறாக, சிங் கள அரசாங்கத்துடன் இணைந்து சர்வதேச சமூகத் தின் கவனத்திலிருந்து புதை குழி விவகாரத்தை மறைக்கவே தமிழ்க்குழுக்கள் உதவிவருகின் றன. இதனால், இந்த விட யத்தில் உலகசமூகமும் பேசா மடந்தையாக உள்ளது.

இரண்டாம் ஈழப்போர்காலத் தில் - ப்றேமதாசாவின் ஆட்சி யில் - படையினர் உருவாக்கிய தமிழர் புதைகுழிகள் தென் தமிழீழம் எங்கும் நிறைந்து காணப்படுகின்றன. இழக்குப் பல்கலைக் கழகத்தில் தஞ்சம டைந்திருந்த தமிழர்களில் இரு நூறு பேரைக் கைதுசெய்து - வாகனத்தில் ஏற்றிச்சென்று - கொன்றுதாட்ட புதைகுழி இன்றுவரை வெளிவரவில்லை. மாறாக, கைதுக்கும் - கொலைக்கும் பொறுப்பாக இருந்த சிங்களத்தளபதிகளின் பதவி உயர்வுச் செய்திகளே வெளிவந்திருந்தன. செம்மணிப் புதைகுழிகளும் அவ்வாறே மறைக்கப்படும் - கொலைப்பொ றுப்பாளிகளுக்கு - பாதுகாப்பும் சிலவேளை பதவிஉயர்வுகளும் கிட்டலாம். O


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# இராணுவக் கற்பனைகளும் புறநிலை யதார்த்தங்களும்

Liberation Tigers Of TAMIL EELAM

புலிகளின் குரல்

தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் உயிர்நிலையாக -சந்திரிகா அரசாங்கம்- குடாநாட்டைக் கருதியது.

படையை ஏவி குடாநாட்டை ஆக்கிரமித்தால் தமிழரின் ஆயுதப்போராட்டத் தீர்த்து சமாதிகட்டிவிடலாம் என்று அது எண்ணியது.

சுமார் ஒரு மில்லியன் தமிழர்களை உலுக்கியெடுத்தபடி, அது குடாநாட்டை ஆக்கிரமித்தது.

ஆக்கிரமிப்புவெற்றியை, சந்திரிகா அரசாங்கம் சந்தோசமாகக் கொண்டாடியது.

குடாநாட்டைக் கைப்பற்றியதன்மூலம் புலிகள் இயக்கத்தின் முதுகெலும்பை உடைத்துவிட்டதாகவும், தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு சாவுமணி அடித்துவிட்டதாகவும், அது பிரகடனங்கள் செய்தது.

ஆக்கிரமிக்கப்பட்ட குடாநாட்டை ஆட்சிசெய்ய ஒரு இராணுவ நிர்வாகத்தையும் நிறுவியது. இதை ஒரு சிவிலியன் நிர்வாகமாகக்காட்டி - உலகை ஏமாற்ற, ஒரு மோசடித்தேர்தலையும் நடாத்தி, தனது இராணுவ நிர்வாகத்திற்கு சிவிலியன் முகமூடியை அணிவித்தது.

படைநடாத்தி ஆக்கிரமிக்கப்பட்ட யதார்த்தத்தை மழுங்கடிப்பதற்காக ஆக்கிரமிப்பிற்குப் பொறுப்பாகவிருந்த தனது தளபதிகளை குடாநாட்டின் அபிவிருத்தி அதிகாரிகளாக -சிங்களம்- காட்டியது.

இரவில் கொலைப் பணிகளுக்குத் தலைமை தாங்கும் சிங்களத்தளபதிகள்- பகலில் தமிழரின் மனங்களை வெற்றிகொள்ளும் கனவான்களாக நடிக்கவைக்கப்படுகின்றனர்.

ஆயினும், சந்திரிகா அரசாங்கம் வகுத்த நேரசூசிப்படி ஆக்கிரமிக்கப்பட்ட குடாநாட்டில் நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை.

ஆக்கிரமிப்பாளர்கள் நடாத்தும் இராணுவ நிர்வாகத்தை சீர்குலைத்து - விடுதலை உணர்வை வெளிப்படுத்துவது தமிழர் போராட்டத்தின் ஒரு பொதுப்பண்பு.

ஒரு இலட்சம் துருப்புக்களை காவலுக்கு வைத்துக்கொண்டு- இந்திய அரசு குடாநாட்டில் நடாத்தமுயன்ற இராணுவ நிர்வாகம், சீர்குலைக்கப்பட்டு-இந்திய அரசுக்குப் பாடம் புகட்டப்பட்டது பழைய கதை.

குடாநாட்டை ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள அரசும் அதைப்போன்ற பாடங்களை படித்துவருகின்றது.

12. 9. 98 அன்று நல்லூரில் நடந்த ஒரு குண்டுவெடிப்பு - குடாநாட்டை கட்டியாள முயன்ற இராணுவ நிர்வாகத்தின் முப்பெருந்தலைமைகளையும் அழித்து - இராணுவ நிர்வாகத்தை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

ஆக்கிரமிப்பை நிலைநிறுத்த முயலும் குடாநாட்டின் இராணுவத்தலைமையையும்;

சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டல் என்ற போர்வையில் குடாநாட்டின் இராணுவ நிர்வாகத்திற்கு துணையாக இருக்கின்ற சிங்களப் பொலிஸ்தலைமையையும்;

குடாநாட்டிற்கான சிவிலியன் தலைமை என்ற பெயரில் சிங்கள அரசு நியமித்த அதன் பொம்மைஆட்சியின் தலைமையையும் அந்தக் கூரைக்குண்டு காவுகொண்டுவிட்டது.

போராடும் மக்களின் நிலங்களை ஆக்கிரமித்தால் போராட்டம் சிதைக்கப்பட்டுவிடும் என்று எதிர்வுகூறிய சிங்களத்தின் இராணுவக்கணிப்பீடு வெறும் கனவாகவே இருந்துவருகின்றது.

அதேவேளை, குடாநாட்டைக் கைப்பற்றினால் புலிகளின் போர்ப்பலம் நசுக்கப்பட்டுவிடும் என்று கணிப்பீடுகள் செய்த சிங்களத்தின் இராணுவ நம்பிக்கைகள் வன்னிப்போர்க்களத்தில் புதையுண்டு போகின்றன. யாழ்ப்பாணச்சமர் நடந்தபோதிருந்த பலத்தைப்போன்று பன்மடங்கு அதிகபலத்துடன் புலிப்படை- இன்று - வன்னிப்போர்முனையில் போரிடுகின்றது. அத்துடன் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் நிலங்களில் நிலைகொண்டுள்ள சிங்களப்படையினர் எரிமலை மீது உட்கார்ந்திருக்கும் மனநிலையுடனேயே வாழ்க்கையை ஓட்டுகின்றனர்.

தமிழரின் இனப்பிரச்சனைக்கு சந்திரிகா அரசாங்கம் திமிர்த்தனத்துடன் முன்வைத்த இராணுவத்தீர்வு - இன்று - மரணப்படுக்கையில் உள்ளது. அதன் இராணுவக்கனவுகள் அனைத்துமே படிப்படியாக கலைந்துவருகின்றன.

வன்னிப்பெருநிலப்பரப்பில் புலிகள் நடாத்தும் தீவிரமான மரபுப்போரின் முன்னால் திணறியபடியும்-

ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் நிலத்தில் புலிகள் நடாத்தும் கரந்தடித்தாக்குதல்களை எதிர்கொள்ளமுடியாது திக்குமுக்காடியபடியும்-

போரின் விளைவுகளால் ஏற்பட்டுவரும் பாரிய பொருண்மிய நெருக்கடிக்குள் சிக்கித் தவித்தபடியும் -

இந்தத் தோல்விகளின் எதிர்வினையாக சிங்களத்தில் தோன்றிவரும் அரசியல் புயலுக்குள் எதிர்நீச்சல் போட்டபடியும்- சந்திரிகா அரசாங்கம் திண்டாடுகின்றது.

தமிழர்நிலத்தில் சிங்களப்படைகள் நிலைகொண்டிருக்கும் வரை, சிங்கள அரசின் இந்த அரசியல்-இராணுவ-பொருண்மியத்திண்டாட்டம் நீடித்து- வலுக்கவே செய்யும். ○

( 08ஆம் பக்கத்தொடர்ச்சி )

## பாதங்கள்...

இதே மாதம் பதினேழாம் திகதி. சூரியக்கதிர் யாழ்குடாவைச் சுட்டெரித்தது. எழிலரசன் குணமடைந்தான். இவன் குறிபார்த்துச் சுடுதலில் மிகத் திறமைமிக்கவனாக இருந்தான். இவனது சூடுகள் அனேகமாகப் பத்துக்களுடனேயே உறவாடுவது வழக்கம். எப்போதாவது ஒன்பதுகளுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளும். இத்திறமை இவனை வேறொரு பணிக்கு இட்டுச்சென்றது. குறுகியகாலப் பயிற்சி முடிந்து ஒரு பதுங்கிச்சுடும் வீரனாக சூரியக்கதிரை சுட்டெரிக்கப் புறப்பட்டான். யாழ்நகரத்தின் தலைவாசலில் இராணுவம் வந்திருந்தது. நாவலர் வீதிச்சண்டை எழிலரசனின் திறமைக்குச் சான்றானது. ஒரேநாளில் பல இராணுவத்தினர் எழிலின் துப்பாக்கிக்கு அடிபணிந்தனர்.

யாழ்குடாநாட்டின் இதயத்தை சப்பாத்துக்கள் நசித்தன. அன்றலர்ந்ததாமரை போலிருந்த யாழ்மண் அரக்கனின் காலடியில் கசங்கியது. தந்திரோபாயமாக புலிவீரர் வன்னிக்கு வந்தனர். எழிலரசனின் பணி வன்னியிலும் தொடர்ந்தது. மேலதிக பயிற்சிக்காக அனுப்பப்பட்டான். பயிற்சி என்பது அவனுக்கு அல்வா சாப்பிடுவது மாதிரி. பதுங்கிசுடும் சூட்டுப்பயிற்சியின்போது அவனது சூடுகள் இலக்கை முத்தமிடத் தவறுவதில்லை. "பட்டிருக்கும்" என்று அவன் கூறினால் அந்த ரவை கண்டிப்பாக மையத்தைத் தழுவியிருக்கும். "இது பிசகிவிட்டது" என்று அவன் கூறினால் இலக்கைப் போய்ப்பார்க்கத் தேவையில்லை. முன்கூட்டியே தன் சூடுகளை மதிப்பிடும் திறன் அவனுக்கேயுரியதாகும்.

வன்னியில் இவனது முதற்களம் ஓயாத அலைகள் நடவடிக்கையாகும். வெண்கலக் கடையில் யானை புகுந்தது மாதிரி முல்லைத்தீவு முகாம் சின்னாபின்னப்படுத்தப்பட்டது. இதில் எழிலுக்கு அதிக வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. ஆனால் சத்ஜய நடவடிக்கையில் இவனது துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட பல ரவைகள் எதிரி இரத்தத்தின் சுவையை அறிந்துகொண்டன. சண்டை மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. இவனது நிலைக்கு அண்மையாக ஒரு போராளியின் உயிரற்ற உடல் வெய்யிலுக்குள் கிடந்தது. இவனது இதயத்தை குண்டூசி ஒன்று கீறிச்சென்றது. உயிர்பிரிந்தபின்பும் நண்பனின் உடல் வெய்யிலில் வேகக்கூடாது. எறிகணைகளின் சிறலுக்கு மத்தியிலும் ஓடிச்சென்று அவ்வித்துடலை நிழலில் வைத்துவிட்டு வந்தான். பின் எடிபலவின் இவனது துப்பாக்கி ரவைகளைத் துப்பியது. எந்நேரமும் எதிரி இலக்குகளைத் தேடித்திரிவதே இவனது பொழுதுபோக்கு. காவலரணில் எதிரியின் தலைக்கறுப்பு, ஒரு குடுதான்; எதிரியின் "கெல்மற்" வெந்திருக்கும்.

நாட்காட்டி சுருங்கியது. "ஜயசிக்குறுய்," இடமான பெயரிட்டான் எதிரி. காவியுடுப்புக்காரர் நல்லநாள் பார்த்துக் கொடுத்தனர். வன்னியின் இதயத்தைக் கிழிப்பதே நோக்கம். "வாங்கடா, வழிமேல் விழிவைத்துள்ளோம்." புலிவீரரும் திடம் கொண்டனர். மாரித் தவளைபோல் வானொலிகள் வெற்றிமுழக்கமிட்டன. புலிகள் அழிந்தனர். போர் முடிந்தது. பழம் பறிக்கும் நேரத்துக்காகக் காத்திருந்தனர் புலிகள். தாண்டிக்குளத்தில் முதல் தூண்டில். ரத்வத்தவின் வாய் கிழிந்தது. பெரியமடுவில் ஆப்பிழுத்த குரங்கானது.

எழிலரசன் படையணிக்கு மாற்றப்பட்டான். ஓர் அணியை பொறுப்பேற்றான். இவனது அணியும் திறமைமிக்கதாயிருந்தது. ஓமந்தையில் வந்து நின்று, பட்ட காயங்களுக்கு எதிரி புனுகு பூசிக்கொண்டிருந்தான். 1 . 8 . 97 அன்று எதிரியின் காவலரண்கள் மீது புலிகள் ஏறிநடந்தனர். முதல் இரண்டு ஊடறுப்புத் தாக்குதலுக்கும் செல்லவில்லையென்ற ஆதங்கம் எழிலரசனிடம் இருந்தது. இத்தாக்குதலில் அவனது துப்பாக்கியிலும் நெருப்புப் பூத்தது. அழகுக்கு மயில், பேச்சுக்கு கிளி, தந்திரத்துக்கு நரி, இல்லையில்லை புலிவீரர்; வேகத்துக்குச் சிறுத்தை, இல்லவேயில்லை, இதற்கும் புலிவீரர்; ஓமந்தையில் நிரூபணமாயிற்று. "பொயின்ற் எலலாம் பிடிச்சிட்டம் . இப்ப கிளியர் பண்ணிக்கொண்டிருக்கிறம். ஆமியின்ர பொடிகள், ஆயுதங்கள் எல்லாம் நிறையக் கிடக்குது." எழிலின் குரல் ஓமந்தையில் கேட்டவண்ணமேயிருந்தது.

மழை பொழிவது மண்ணுக்கு தன்னை அர்ப்பணிக்கவே. காற்று வீசுவது உலகம் உயிருடனிருக்கவே. மரங்கள் வாழ்வது உயிர்களை வாழவைக்கவே. மெழுகுதிரி தன்னை உருக்குவது உலகிற்கு வெளிச்சம் தரவே. புலிவீரர் வீழ்வது தமிழீழ விடியலுக்கே. கூவிவந்த செல்லொன்று எழிலரசனின் அருகே வீழ்ந்து வெடித்தது. வெற்றியில் பூரித்திருந்தவனின் தலையை சிதறுதுண்டொன்று தாக்கியது. ஓமந்தை மண்ணில் அவனது குருதி படர்ந்தது. தமிழீழக் காற்றோடு அவனது உயிர் கலந்தது.

மரணத்தால் உன் உயிரைத் திருடமுடிந்தது. உன் புன்னகையை, பொலிவை அதனால் திருடமுடியவில்லை உனது குரல், உனது குறும்பு, என் இதயத்தில் இன்னும் பசையாய் ஒட்டியிருக்கிறது. எனக்கு தாகமெடுக்கும் போதெல்லாம் இப்போதும் என் அருகில் நீரோடையாய் ஓடிவருகிறாய் நீ உன்னை விதைகுழியில் வைத்து ஒருபிடி மண்போட்டேன். போட்டதும் கையைத் திறந்தேன், அதிலும் உன் முகந்தான். ஆயிரமாயிரம் மாவீரருடன் நிம்மதியாக நீயும் உறங்கு. மழையின் பயணம் மண்ணைத் தேடும் வரை ஓயாது. எமது பயணமும் தமிழீழம் காணும்வரை ஓயாது. ○

# சுதந்திர எழுச்சிகொள்ளும் அனைத்துலக ஈழத்தமிழினம்

தமிழினத்தின் இராணுவபலம்- பேரினவாதிகளை - அச்சுறுத்திக்கொண்டிருக்கும் இன்றையநிலையில் புலம்பெயர்ந்துவாழும் ஈழத்தமிழர்கள் மத்தியில் அதிகரித்துவரும் அரசியல்விழிப்புணர்வு பேரினவாதிகளை - மேலும் - பதட்டமடையச்செய்துள்ளது. இந்த உண்மையை பேரினவாதப்பத்திரிகையாளர்களே எரிச்சலுடன் ஒப்புக்கொண்டு - கட்டுரைகளை எழுதிவருகின்றனர்.

அண்மையில் ஈழத்தவர்கள் வதியும் உலகநாடுகளில் நினைவுகூரப்பட்ட 83 கறுப்புயூலையை புலம்பெயர்ந்த தமிழர்கள் ஒன்றுதிரண்டு எழுச்சியுடன் கொண்டாடியவிதம், பேரினவாதிகளை கலங்கவைத்துள்ளது.

இராணுவ அட்டூழியங்களை கண்டிக்கவும், சிங்கள அரசின் பொருண்மியத்தடைகள் - நிவாரணவெட்டுக்களை சர்வதேசசமூகத்திற்கு வெளிச்சமபோட்டுக்காட்டவும் தமிழர்கள் வீதிகளில் ஒன்றுகூடுமபோது - அந்த அந்த நாடுகளில் - அவைகள் முக்கிய அரசியல் செய்திகளாகின்றன.

இத்தகைய அரசியல் ஆர்ப்பாட்டங்களின் போது - முன்னெப்போதும் இல்லாதவகையில்- புலம்பெயர்ந்த தமிழர்கள் அதிகளவில் ஒன்றுகூடுகின்றனர். புலிகள் இயக்கம்தான் தங்களது அரசியல் தலைமைச் சக்தி என்று கூறியும் - தலைவர் பிரபாகரன் அவர்களே ஈழத்தமிழினத்தின் தேசியத்தலைவர் என்று பிரகடனப்படுத்தியும் வருகின்றனர்.

புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களுக்கென தலைவர் பிரபாகரன் ஆற்றிய உரையின் வீடியோ கசற்றுக்கள் அண்மையில். வெளிநாடுகளில் விநியோகிக்கப்பட்டன. தலைவரின் உரை, புலம்பெயர்ந்த மக்களுக்கு உணர்வையும் உற்சாகத்தையும் - விழிப்புணர்வையும் உண்டாக்கிவருகின்றது. போராட்டத்தின் இன்றைய நிலைபற்றியும் - புலம்பெயர்ந்த மக்களின் போராட்டப்பங்களிப்பு பற்றியும் தலைவர் ஆற்றிய விளக்கஉரை, மக்களின் உள்ளத்தைத் தொட்டு வருவதாகவும் - புலிகளின் பின்னால் அணிதிரள அவர்களைத் தூண்டிவருவதாகவும் சண்டேலீடர் பத்தி எழுத்தாளர் ஒருவர் ஆதங்கப்பட்டுக் கொண்டுள்ளார்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் போராட்ட உணர்வை வளர்க்கவும் - தாய்நிலத்தின் செய்திகளை அறிவிக்கவும் என்று பல பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலிச் சேவைகள் செயற்பட்டு வருகின்றன. இவைகள் தாய்நிலத்துடனான உணர்வுத் தொடர்பை பராமரித்து - போராட்ட உணர்வை ஊட்டுகின்றன.

நாற்பதுக்கும் அதிகமான பத்திரிகைகள் - சஞ்சிகைகள் வெளிஉலகில் வெளியிடப்படும் அதேவேளை, அரைடசின் அளவு வானொலிச் சேவைகள் உட்பட 'தமிழ்நெற்' மற்றும் தொலைபேசிகள் ஊடான செய்திப்பரிமாற்றங்கள் — என்று சக்திமிக்கதொரு தொடர்பு ஊடகத்தை, புலம்பெயர்ந்த் தமிழர்கள் கட்டிவளர்த்து வருகின்றனர்.

ஈழத்தமிழர்கள் வதியும் உலகநாடுகள் அனைத்திற்கும் இந்த வெளியீடுகள் - வானொலிச்சேவைகள் சென்றடைகின்றன. இங்கிலாந்து- அவுஸ்ரேலியா - கனடாவிலிருந்து வெளிவரும் ஆங்கிலமொழி வெளியீடுகள் தமிழீழவிடுதலைப்போராட்டத்தை சர்வதேச சமூகத்திற்கு விளக்கும் பணியை திறம்படச்செய்கின்றன.

சுமார் 8 இலட்சம் ஈழத்தமிழர்கள் உலகநாடுகளில் பரவிவாழ்கின்றனர். பொருண்மிய நிலையிலும், அறிவியல்தளத்திலும் சக்திமிக்க மக்களாகவே, இவர்கள் அந்த, அந்த நாடுகளில் வாழ்கின்றனர்.

புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களை தாய்மண்ணில் நடைபெறும் விடுதலைப்போராட்டத்திலிருந்து பிரித்துவைத்திருக்கவே சிங்கள அரசு முயற்சிக்கின்றது. புலம்பெயர்ந்தோரின் பொருண்மிய உதவிகளும்- அரசியல் ஆதரவும் புலிகள் இயக்கத்திற்கு கிடைக்கவிடாது தடுக்கும் முயற்சியில், கதிர்காமர்குழுவினர் கடுமையாக முயல்கின்றனர்.



சிங்களஅரசின் பொருண்மியத்தடைகள், இராணுவ அட்டூழியங்களை சர்வதேச சமூகத்திற்கு பகிரங்கப்படுத்தும் புலம்பெயர்ந்த தமிழர்களின் அரசியல் ஆர்ப்பாட்டப்பேரணி.

தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு பயங்கரவாத சாயம்பூசி - அந்தப்போராட்டத்திற்கு பொருள் உதவிகள் புரிவதை சட்டவிரோதச் செயலாக வெளிநாட்டு அரசுகள் பிரகடனப்படுத்த வேண்டும் என்று சிங்கள அரசு கோரிக்கைகள் விடுகின்றது. ஆனால், ஈழத்தவர்கள் பெருமளவில் வசிக்கும் ஐரோப்பிய - அவுஸ்ரேலிய கனடா நாடுகளின் அரசாங்கங்கள் சிங்கள அரசின் கோரிக்கைகளை நிராகரித்துவருகின்றன.

இதனால் கோபமடைந்துவரும் பேரினவாதிகள் கொழும்பிலுள்ள அந்த நாடுகளின் தூதர்களைச் சந்தித்து, செவ்வி என்ற கோதாவில் தமது அதிருப்திகளை கேள்விகளாக்கி - தூதர்களுடன் மோதுகின்றனர்.

அண்மையில் இங்கிலாந்து - நேர்வே நாட்டுத்தூதர்களை

( 10ஆம் பக்கம் பார்க்க )

- எல்லாளன் -

# இலக்கைத் துகளாக்கி உயிரேந்திமீண்ட தேசத்தின் புயல்கள்

கனகராயன்குளத்தில் இருந்த தற்காப்பு சமர்நிலையை தந்திரோபாய பின் நகர்வாய் மாங்குளத்துக்கு எமது படையணிகள் மாற்றியிருந்தன.

அன்று இரவு, தளபதிகளோடு கதைத்து விட்டு உறங்க நினைத்த எமக்கு உறக்கம் வரவேயில்லை. எப்படித்தான் வரும்; எமக்குரிய அந்த இலக்கு அழிக்கப்படும் வரை.

எமது கரும்புலிகளின் விசேட அணி, வானம் இருண்டு கிடந்தது. விடியலுக்கு உரிய எந்தத்தடயமும் அதில் தென்படவில்லை. நேரம்



பல்லு கிடுகிடுக்க - அருவிகள், காடுகள் தெரியாமல் காடே வெள்ளக்காடாய்க்கிடக்க-விழுந்து, விழுந்து எழுந்தபடியும் அருவி நீரோட்டத்துக்கு எதிர்நீச்சல் போட்டும் நகர்ந்தோம்.

இடையிடையே மழை என்று கூடப் பாராமல் எதிரி ரோந்து சென்ற தடயங்கள். அதனைப் பின் தொடர்ந்து எதிரியின் போலிக்காவல் அரணிற்கு அருகில் சென்று மதிய உலர் உணவை முடித்துவிட்டு - பல மினிமுகாம்களையும், காடுகளின் ஊடே இடைக்கிடை அமைந்திருக்கும் கம்பித்தடைகளை, முட்கம்பி வேலி

[31.12.97] அதிகாலை 3.30 மணியிருக்கும். இருளோடு இருளாக தளபதிகள், சகபோராளிகள் விழிகசிந்து - கையசைத்து வழியனுப்ப, அவர்களின் பார்வையில் இருந்து மெல்ல மெல்ல இருளோடு கரைந்து கனகராயன்குளத்தின் ஊடாக நகர்ந்துகொண்டிருந்தோம்.

அது எதிரியின் கோலைவலயம். எந்நேரமும் எதிரி தயார் நிலையில் இருக்கும் பிரதேசம் அது. நிலமட்டத்தோடு உருமறைக்கப்பட்ட முன்னணிக் காவல் அரண்கள், முட்கம்பி வேலிகள், பற்றையோடு பற்றையாக இலகுவில் இனம் கண்டு கொள்ளமுடியாத பொறிக்கண்ணிகள், இவை ஒருபுறமிருக்க உள்நுழைய முடியாத முட்பற்றைகள், இறுசல் காடுகள், நீர்நிறைந்து பாய்ந்துகொண்டிருந்த காட்டாறுகள்; இவை இன்னும் எமக்கு பாதகமாய் இடையூறாகவே இருந்தன. ஏனெனில் இவற்றின் ஊடாக எமது ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் சத்தமின்றி கொண்டு செல்வது கடினமான பணியே தான்.

முன்னணிக்காவல் நிலையைக் கடந்து இராணுவப் பிரதேசத்துக்குள் நுழைந்து விட்டோம். அங்கும் அமெரிக்கப் பயிற்சி பெற்ற சிறப்புப் படையணிகள், தேடுதல் நடத்துவதற்காய் அடிக்கடி செல்லும் ரோந்துப்பாதைகள், அதன் இடைக்கிடை அமைந்திருக்கும் மினி முகாம்கள், மற்றும் பகல்நேரக்கண்காணிப்பு நிலைகளைக் கடந்து விஞ்ஞானகுளத்தின் தெருவோரப் பற்றைக்குள் தங்கினோம். காலை, மதிய உணவுகளை உண்டு இருட்டும்வரை காத்திருந்தோம். அதுவரை, விஞ்ஞானகுளப் பாதையால் செல்லும் இராணுவ வீதியாக வாகனங்களைப் பார்த்துக் கொண்டிருக்க, எமக்கு அருகாய், மிக அருகாய் இராணுவ ரோந்து அணி ஒன்று பற்றைக்குள்ளால் சென்றுகொண்டிருந்தது.

நாம் கடந்து வந்த கனகராயன்குளப் பக்கமாய் ஒரே வெடிச்சத்தங்களும், எறிகணைகள் சீறிச்செல்லும் ஒலியுமே சரமாரியாகக் கேட்டவண்ணமிருந்தது. பின்னர்தான் தெரிந்து கொண்டோம், கனகராயன்குளத்தை நோக்கி சிங்களப்படைகள் சென்றுகொண்டிருப்பதாய். அந்த விஞ்ஞானகுளப் பற்றைக்குள் இருட்டும் வரை தங்கியிருக்கும்போது முதல் நாள் நினைவுகள் நினைவில் வந்து கலந்தன—

தமிழீழத் தேசியத்தலைவரை சந்திக்கும் பொன்னான பொழுதுக்குள் பிரவேசித்துக் கொண்டிருந்தோம். ஒரு கரும்புலித்தாக்குதலுக்காய் செல்லும்போது அவரிடம் விடைபெற்றுச் செல்வது எமக்கெல்லாம் ஒரு ஆத்ம திருப்தியை தந்தது. மலருகின்ற தமிழீழத்தில் மகிழ்வோடு வாழ்வதான ஒரு புதிய உத்வேகம், ஒரு புதிய புத்துணர்வு, எம்மை ஆட்கொள்ளும் கணங்கள் அவை. அவரோடு மகிழ்ந்து பேசி, கூடிக் குதூகலித்து, உண்டு உறவாடி, வயிறு குலுங்கக்குலுங்க சிரித்து, பல கோணங்களில் படங்கள் எடுத்து, விம்மிடும் நெஞ்சுடன் அவர் எம்மை வழியனுப்பிவைக்கும் அந்த கணம் வரையான காலமே, பூமிப்பந்தின் பொன்னான காலமாகும்.

தனது அழகான கையசைப்பால் தாக்குதல் திட்டத்தை தெளிவுபடுத்தி- அதற்கான நகர்வை, அதன் வியூகத்தைச் சொல்லித்தந்து - வெற்றியோடு சென்று வாருங்கள் என்று தன் கையசைத்து இரண்டு விரல்களையும் காட்டிய போது வெற்றிபெற்ற திருப்தி எமக்கு அப்போதே ஏற்பட்டது.

எந்தவித மாதிரிப் பயிற்சியும் இன்றி திடீர் என எம்மால் மேற்கொள்ளப்படும் தாக்குதல் இதுவாகும்.

கரும்புலி மேஜர் குமுதன் அண்ணாவின் தலைமையில் எமது அணி தெரிவு செய்யப்பட்டது.

வானம் இருளாகிக்கொண்டிருக்க சேறு நிறைந்த சதுப்பு நிலத்தின் ஊடாக நடந்து விஞ்ஞானகுளம் காவல் நிலையைக் கடந்து- எதிரியின் வாகனங்களின், காவல் நிலைகளின் வெளிச்சத்துக்கு மறைந்தும், மோப்ப நாய்களின், எதிரிகளின் கண்களில் மண்ணைத் தூவியவாறும் நகர்ந்தோம்.

கொமாண்டர் மட்டுமல்ல அந்த ஜீப்பும் வெறியோடு அந்த வீதியால் விரைந்துகொண்டிருந்தது. மீண்டும் அதே வீதியால்தான் அது வரும் ... வந்தது நல்ல இலக்குத்தான் ஆனால் நாம் தாக்கவில்லை. ஏனெனில் எமக்குரிய இலக்கு அதைவிடவும் பெறுமதி வாய்ந்தது

அந்த வீதியால் தண்டனையில் ஒரு இராணுவத்தினன் ஓடிக்கொண்டிருந்தான் அந்த கரும் இருட்டிலும் எங்கள் எழில் கொஞ்சும் வனப்பு மிக்க விஞ்ஞானகுளத்தின் அழகை கூர்ந்து அவதானித்தபடி அதன் இப்போதைய சீரழிந்த நிலையை பார்த்த மனவேதனையுடன் இராணுவப் பாதணிகளால் எதிரியை ஏமாற்றிய படி வீதியாலேயே சென்றோம்.

**- கருவேங்கை -**

பின்னர் இராணுவ நிலைகளின் ஊடாகவே சுற்றிடங்களைக் கடந்து வயல்வெளிகளில் சதுப்பு நிலங்களின் ஊடாக நகர்ந்துகொண்டிருந்தோம். எமது இரவுப்பார்வைச் சாதனமும் செயலிழந்துபோக, நிதானமான - நீண்டநேர அவதானிப்போடு நகரவேண்டி இருந்தது.

அது, மறக்கமுடியாத -மிகவும் வேதனையான நகர்வுதான். வரம்பில் நடந்தால் சறுக்கி விழுந்தும். சேற்றில் நடந்தால் பெரிய சத்தம் கேட்கும். சூவோடு காலைத் தூக்கித் தூக்கி வைத்து நடக்க அதிக சக்தி தேவைப்பட்டது. மழை பெய்துகொண்டே இருந்தது. மண்ணை அடிக்கடி முத்தமிட்டபடியேதான் சுமையோடு நகரவேண்டி இருந்தது. ஏனெனில் கால்வைக்கும் இடம் சேறாய் இருக்கும், இல்லாவிடில் நீர் நிறைந்த சிறிய இடங்களாய் இருக்கும்.

பெயர் தெரியாத ஒரு வீதியைக் கடந்து- முட்பற்றைக்குள் ஓய்வு எடுப்பதற்காய் தயார் செய்யும்போது பத்து மீற்றரில் ஆமி ரோச் அடித்துக்கொண்டிருந்தான். அவன் காட்டு மிருகங்கள் என்றுதான் நிச்சயமாக நினைத்திருப்பான். நாம் உடனே அங்கிருந்து நகர்ந்து 300 மீற்றரில் மீண்டும் பற்றைக்குள் தங்கினோம். மழை மனந்திறந்து கொட்டோ கொட்டென்று கொட்டிக்கொண்டே இருந்தது. எங்களுடன் சேர்ந்து ஆயுதங்களும் வெடிமருந்துகளும் நனைந்து கொண்டே இருந்தன.

இப்படித்தான், 1998 ம் ஆண்டினுள் மட்டுமல்ல, அந்த அதியுயர்பாதுகாப்பு வலயத்தினுள்ளும் நுழைந்துகொண்டிருந்தோம் ———

01.01.1998 அதிகாலை 5 30மணி. காடுகளின் ஊடே வானம் ஆனந்தக்கண்ணீர் விட்டு எம்மை நனைக்க - 75 வயது வயோதிபரின் நடுக்கத்தில் பல்லு கிடுகிடுக்க

களை, பொறிக்கிடங்குகளை, இலாவகமாக கடந்து- எமக்குரிய அந்த இலக்குக்குரிய முகாமின் முன்னணிக் காவல் நிலையில் இருந்து 75 மீற்றரில் ஒரு பற்றைக்குள் தங்கினோம். (அந்த முகாம்தான் ஜயசிக்குறுய் படைநடவடிக்கைக்கான களக் கட்டளைத் தலைமையகம்.) ஒரு பெல் 212 உலங்கு வானூர்தி, எம் தலைக்கு மேலால் சென்று அம்முகாமில் இறங்கி - அவசரமாக மேலெழுந்து சென்றது. 'கூறுமீன் வருமட்டும் வாடிநிற்கும் கொக்காக'' நாம் காத்திருந்தோம்.

நாளையும் உலங்கு வானூர்தி வரும்; அப்படி வராதுவிட்டால் வரக்கூடியவாறான ஒழுங்குகள் செய்து தருவதாய் தளபதிகள் சொன்னது நினைவுக்கு வந்து போனது.

இரக்கமில்லாமல் மழை மூன்றாவது நாளாயும் பெய்துகொண்டே இருந்தது. எல்லோரும் மழையில் தொடர்ந்து நனைந்தபடியால் கசநோய்க்காறரைப் போல இருமிக்கொண்டே இருந்தார்கள். நானும் தான். ஒருவர் இருமும்போது அருகில் இருப்பவர் ''டேய் இருமிக்கொண்டிருக்காத ஆமிக்கு கேட்டிடும்'' என்று சொல்லி முடிப்பதற்குள், சொன்னவரே இரண்டு தடவை இருமிவிடுவார்.

02.01.98 காலை பற்றைக்குள் ஒளித்திருந்தபடியே துப்பாக்கிகளை துப்பரவாக்கிக் கொண்டிருந்தோம். முற்பகல் 11.30 மணியிருக்கும், எதிரியின் எல்லா ரோந்து அணியும், தமது பணியினை முடித்து அந்த முகாமுக்குள் நுழைய, அவர்களின் பின்னால் அதே பாதையால் நாம் அம்முகாமின் தடைகளையும் காவல் நிலைகளையும் கடந்து, உள்ளே இருந்த இராணுவ கண்காணிப்பு நிலையையும் ரோந்து அணியையும் கடந்து, தம் கடன் கழிக்கவரும் எதிரிகளின் கண்களிலும் வேட்டைக்கும் வேறு தேவைக்குமாக சுற்றித்திரிபவர்களின் கண்ணிலும் படாமல் சாதுரியமாக நகர்ந்து.

உலங்கு வானூர்தி தரையிறங்கும் மேடையில் இருந்து 150 மீற்றரில் இருந்த பற்றைக்குள் மறைந்திருந்தோம். அப்போது தாக்குதலை எவ்வாறு நடத்த வேண்டும் என்ற வியூகத்தினை குமுதன் அண்ணர் தெளிவுபடுத்தினார்.

எமக்கு அருகில் நின்ற மரத்தினை இரண்டு இராணுவத்தினர் சோட்ஸ்சோடு தறித்துக் கொண்டிருந்தனர். அருகில் தெரிந்த கிணற்றில் 15க்கு மேற்பட்ட இராணுவத்தினர் குளித்துக் கொண்டிருந்தனர்.

நேரம் சரியாக நண்பகல் 1.26. ஹெலியின் ஒலி எமது உள்ளத்தில் மட்டுமல்ல உணர்விலும், என் உடலின் ஒவ்வொரு அணுவிலுமே புதிய ஒரு புத்துணர்வை ஊட்டிக்கொண்டிருந்தது. அதன் சத்தம் எம்மை அண்மிக்க அண்மிக்க அந்த இனிமையான உணர்வு எம்முள் கூடிக் கொண்டே இருந்தது.

MI.17 உலங்கு வானூர்தி அரைவட்டம் அடித்து மேடையில் இறங்குகின்றது. பற்றைக்குள் இருந்து வேகமாய், மிகவேகமாய் 110மீற்றர் தூரத்தை நொடியில் கடந்து - அதே வேகத்தில் நிலை எடுத்து, எம்மவர்கள் இலகு ரக உந்துகணைசெலுத்திகளால் தாக்கவும், நான் T.81 LMGயால் தாக்கவும், எரிந்தபடி மேலெழுந்த ஹெலி, அதே வேகத்தில் தீப்பிழம்பாகிச் சிதறி கருமண்டலமாய் போக நேரம் சரியாக நண்பகல் 1.27. அந்தக் கணநேரத்தில் அதை பார்த்துக்கொண்டே நிற்க,


(11ஆம் பக்கம் பார்க்க)

# தம்மைத் தாமே முற்றுகையிடுபவர்கள்

வே. பாலகுமாரன்

"எப்போது புலிகள் எம்மை வாக்களிக்க அனுமதிக்கப் போகின்றார்கள்? எவ்வித வன்முறையோ அச்சுறுத்தலோ விடுக்காமல் இவ்வளவு இலகுவாக புலிகளால் இதனை எவ்வாறு செய்ய முடிந்தது? இப்படியானதொரு அரசியல் வெற்றியை இவர்களுக்கு எமது மாநாயக்கர்களும், போரினை வெற்றிகரமாக நடத்துவதாக கூறிக் கொள்பவர்களும் அல்லவா தங்கத் தாம்பாளத்தில வைத்து வழங்கியிருக்கிறார்கள்." சுதந்திரப் பத்திரிகையாளன் எனக் கூறிக்கொண்டு காலத்திற்கு காலம் சந்திரிகா அம்மையாருக்கு ஆதரவு வழங்கும் சிங்களத்தின் பிரபல அரசியல் அங்கத எழுத்தாளரான/ செய்தியாளரான ஆரியன் ராஜகருணநாயக்க சண்டேலீடரில் (ஓகஸ்ற் 02) எழுப்பிய இக்கட்டான கேள்விகள் இவை.

எம்பிலிப்பிட்டியவின் தேக்கங் காட்டில் இராணுவத்தால் கொல்லப்பட்ட மாணவரின் மரண ஓலத்திலிருந்தும், சூரியக்கந்தை புதைகுழிகளிலிருந்தும் சனநாயகத்தைக் காப்பாற்றக் கிளம்பிய அம்மையாரை நோக்கிய இக்கசப்பான கேள்விகளோடு இன்னொரு கேள்வியும் அங்கு புகைகின்றது. 'முடியுமானால் போரை நடத்திப்பார்' என அம்மையாரை நோக்கி சவால் விட்ட மாமனுக்கும் மருமகளுக்குமான பனிப்போரின் இன்றைய நிலையென்ன? எவ்வித முன்னறிவிப்புமின்றி, தான் என்றுமே மேற்கொள்ளாத மிக நீண்ட (12 நாள்)



வெளிநாட்டுப் பயணத்தை கடந்த மாதம் 18 ம் திகதி ரத்வத்த மேற்கொண்டதேன்? ரத்வத்தவின் போர் வெற்றிக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கும் ஐலண்ட் ஏட்டில், யூலை 27 ம் திகதி வெளியிடப்பட்ட செய்தியின் நோக்கம் என்ன? அச்செய்தியில் சங்காய் துறைமுகநகரில், அந்நகர துணைமேயர் அளித்த வரவேற்பின்போது ரத்வத்த பின்வரும் பொன்மொழிகளை உதிர்த்ததாக தெரிவிக்கப்பட்டது.

"தென்னாசியப் பிராந்தியத்தில் சீனா முதலிடுவதற்கு மிகப்பொருத்தமான நுழைவாயில் ஸ்ரீலங்காவே தனக்குள் தானே போரிடும் ஒரு நாட்டிலிருந்து நான் வந்திருக்கின்றேன் — நீங்கள் அடைந்துள்ள அரசியல் உறுதிப்பாட்டை எனது நாட்டிலும் உருவாக்கவே உங்கள் ஆலோசனையை, உதவியை நாடிவந்துள்ளேன். எனது நாட்டில் நடக்கும் போரை நான் நெறிப்படுத்தினாலும், போர் மூலம் மட்டும் அமைதி கிட்டும் என நம்பவில்லை. தேசிய வருமானம் பொருத்தமாகப் பங்கிடப்பட்டாலே அமைதி தோன்றும் —"

இவ்வாறாக அமைதிபற்றி தத்துவம் பேசிய ரத்வத்த, சார்க் தலைவர்கள் தத்தம் நாட்டுக்கு திரும்ப தயாராகையில்,25 ம் திகதி நாடு வந்து - சில காலம் அமைதி காத்து பின் திடீரென இம் மாதம் 13 ம் திகதி ரூபவாகினியில் தோன்றி, தனது சீனப்பயணம் பெருவெற்றியென்றும், அம்மையாரின் ஆசியோடுதான் சீனா சென்றேன் எனவும் கதையளந்தார். இவர் என்ன கூற வருகிறார்? இவர் தொடர்பில் எதற்காக சந்திரிகா பொறுமை இழந்தார்? எதற்காக அவரது அளவற்ற அதிகாரங்களை மட்டுப்படுத்த அம்மையார் முயல்கின்றார்? "காலம் மிகச் செல்வதால் அம்மையார் பொறுமை இழக்கின்றார், ஜயசிக்குறுய் வெற்றி தள்ளிப்போவதால் மாற்றுவழிகள் பற்றி சிந்திக்கின்றார்" என காரணம் கற்பிக்கின்றது, 28ம் திகதி ஐலண்ட் ஏட்டின் பாதுகாப்பு ஆய்வு.

அம்மையாரின் இக் குழப்ப நிலைக்கு ஆதாரபூர்வமான அறிவியல் ரீதியான விளக்கங்களும் இப்போது சிங்களத்திலிருந்தே வெளிவருகின்றன. முன்னாள் விமானப் படை உயரதிகாரி, முன்னாள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர், ஏயர்வைமாசல் கரிகுணதிலக்க என்ன சொல்கிறார்? தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தை எப்போதும் வலியுறுத்திவரும் அட்ரியன் விஜயமன்னவின் வெற்றி பெற்ற விடுதலை இயக்கங்களின் பொதுமைப்பண்புகள் பற்றிய ஆழமான ஆய்வொன்றை அடிப்படையாக வைத்து 'கரி' கூறுகின்றார்: எத்தகைய பேரிழப்புகள், தடைகள் வரினும் அதற்கு முகம் கொடுத்து தாக்குப்பிடிக்கும் இவ்வியக்கங்களின் ஆற்றல் மரபுரீதியான விளக்கங்களுக்குட்படுத்தப்பட முடியாதது. உடனடி, விரைவான வெற்றி குறித்து எவ்வித மயக்கமுமற்ற இவ்வியக்கங்கள், தங்களதும் தங்கள் மக்களதும் தியாகங்களை ஒருபோதும் சமரசம் செய்யா. தம் மக்களின் விடுதலை, தன்னாட்சி என்கிற இவர்களின் வேட்கையின் முன் எதுவும் ஈடுகொடுக்கா. இராணுவத் தோல்விகள், பின்னடைவுகள் ஏற்படும் போதுதான் இவர்களின் உறுதியும் தீவிரமும் முன்னைவிட அதிகமாகும். இவர்களின் இலக்கு அடையப்படும்வரை இவ்வுணர்வு எள்ளளவும் குறைவடையாது.

இவ்வாறாக பல பொதுமைப் பண்புகள் புலிகளை முன்னிலைப்படுத்தி சொல்லப்படுகின்றன. மிக முக்கியமான இன்னொரு பொதுமைப்பண்பு 'எண்ணிக்கை' தொடர்பிலானது. எந்தவொரு விடுதலை அமைப்பிற்கும் அது சார்ந்த இனத்தின் முழுமையான ஆதரவு கிட்டியதாக வரலாறில்லை. எப்போதுமே பொதுவான மக்கள் கூட்டத்தில் வீரம், ஈகம், இணைந்த விடுதலை உணர்வுள்ளோர் சிறுபான்மையினராகவே இருப்பர். இவர்களின் ஆதரவு இருக்கும் வரை விடுதலை அமைப்புக்கள் வெற்றி நோக்கி நகரும். இங்கு எண்ணிக்கை முக்கியமல்ல, எழுச்சியுள்ள இனமான உணர்வே முக்கியம். வட அயர்லாந்தின் புரட்டஸ்தாந்தரோடு ஒப்பிடுகையில் சிறுபான்மையினரான றோமன் கத்தோலிக்கரில் சிறுபான்மையான தொகையினர் ஐ.ஆர்.ஏ. இயக்கத்திற்கு ஆதரவாக உள்ளனர்.

இங்கு அதிசயத்தை தரும் இன்னொரு பொதுமைப்பண்பு, விடுதலை அமைப்புக்களை அழிக்க, ஒடுக்க முற்படுவோரின் கணிப்புகள் பற்றியது. 1968ம் ஆண்டு வட அயர்லாந்திற்கு பிரித்தானியப் படை அனுப்பப்பட்டபோது ஐ.ஆர்.ஏயின் கதை சில மாதங்களில் முடிந்துவிடும் என லண்டன் நம்பியது. ஆனால் இன்று 29 வருடங்கள் கழிந்தபின் - வருடாந்தம் 3.25 பில்லியன் ஸ்ரேர்லிங் பவுண் செலவழித்த பின் - ஒரு ஐ.ஆர்.ஏ.போராளிக்கு 100 துருப்புக்கள் விதம் ஈடுபடுத்திய பின் - நடந்தது என்ன?

1965ஆம் ஆண்டு தென் வியற்நாமிய அரசு, வியற்நாமிய விடுதலைப் போராளிகளை அழிக்க - அமெரிக்கா உதவ முற்பட்டபோது, அமெரிக்க அரசும் சில மாதக்கணக்கே போட்டது. ஆனால 10 வருடங்கள் கழிந்தபின் - 56 ஆயிரம் அமெரிக்கத்துருப்புக்கள் கொல்லப்பட்ட பின் - 1½மில்லியன் வியற்நாமியர் கொல்லப்பட்ட பின் - என்ன நடந்தது?

1961ஆம் ஆண்டு விரல் விட்டு எண்ணக்கூடிய எரித்திரிய விடுதலைப்போராளிகளை அழிக்க எத்தியோப்பிய சக்கரவர்த்தி பெரும் படை அனுப்பி 31 ஆண்டுகளின் பின் எரித்திரியா புலிப்பந்தில் புதிய தேசமாகியது எப்படி? 1987ம் ஆண்டு தேசிய பாதுகாப்பமைச்சராக பொறுப்பேற்ற லலித் அத்துலத்முதலி, ஆக மிஞ்சிப்போனால் தீவிரமாக இயங்கக்கூடிய 300 புலிகளே உள்ளனர். இவர்களை ஊதித் தள்ளி விடுவேன் என்றார். இவ்வாறு - ஆதாரபூர்வமான விளக்கங்கள் சொல்லாமல் சொல்லும் செய்தி என்ன? "இவர்களுக்கு எது நடந்ததோ அதுவே உங்களுக்கும்" இதுவே செய்தி.

அறிவுபூர்வமான இன்னொரு விளக்கத்தையும் பார்க்கலாம். அமெரிக்க பல்கலைக்கழகமொன்றில் கிளர்ச்சிவாத அமைப்புகள், அவை தொடர்பான படைத்துறை வரலாறுகள் போன்றவை பற்றி மெத்தப் படித்து பட்டம்பெற்ற றோகன் குணரத்தினவின் விளக்கமிது. "ஸ்ரீலங்காவின் இனச்சிக்கலும் தேசியப்பாதுகாப்பும்" என்கிற தனது நூலில் புலிகளை வெல்ல முடியாதிருப்பதற்கு காரணங்கள் என்ன? புலிகளை வெல்வதாயின் செய்ய வேண்டியவை என்ன? என நீண்ட பட்டியலே போடுகின்றார். இன்று சிங்கள அரசு மரபுவழியான கட்டமைப்பைக்கொண்ட மரபுவழியற்ற எதிரியோடு (An unconventional enemy with conventional organization) மோத வேண்டியுள்ளது. ஆனால் இராணுவத்தின் மொத்த வலுவில 10 விழுக்காட்டு அளவுப் படையினரே இத்தகைய எதிரியோடு மோதக்கூடிய உயர் பயிற்சி பெற்ற சிறப்புப்படையினராக உள்ளனர். நகர் சார்ந்து, கிராமப்புறம், காடு சார்ந்து போரிடும திறன் கொண்ட புலிகளோடு மோதுவதாயின் ஆகக் குறைந்தது 30 விழுக்காட்டளவு படையினராவது இத்தகைய பயிற்சிகள் பெற்றிருக்கவேண்டும். வெற்றி அடையப்பட வேண்டுமானால் நிச்சயமாக சிறப்புத் தேர்ச்சி பெற்ற படையினர் 50 விழுக்காட்டளவிற்கு இருத்தலவசியம்.

அதேவேளை ஸ்ரீலங்கா இராணுவத்தின் தொகை கடந்த 15 வருடத்தில் 1200 விழுக்காட்டளவு உயர்ந்த போதும், அதன் போரிடும் திறனோ, உள்ளகக்கட்டமைப்போ இதற்கு தகுந்தாற்போல் விரிவாக்கம் பெறவில்லை. இதன் விளைவு தப்பியோடுவோர், படுகாயமடைவோர், இறப்போர் தொகை வேகமாக அதிகரிக்கின்றது. வடமுனைப் போரரங்கில் 50 ஆயிரம் படையினர் இருந்தாலும் புலிகளோடு போரிடக்கூடிய திறனுள்ளவர் 20 ஆயிரம் பேரேயுள்ளனர், புலிகளை வெல்ல வேண்டுமாயின் இத்தகைய திறன் கொண்ட 80 ஆயிரம் படையினராவது வேண்டும். இத்தகைய நிலைமைக்கு பிரதான காரணம் சிங்களப் படையின் பயிற்சிக்காலம் இரண்டு மாதமாக குறைக்கப்பட்டதே. அமெரிக்க இராணுவ வல்லுநர்களின் கருத்துப்படி சிங்களப்படை வீரன், புலிவீரனுக்கு வீரனாக ஆயுதத்திற்கு ஆயுதமாக நின்று போராடி புலிகளை வெல்வதாயின் அவர்களை விட கூடுதலான போரிடும் திறன் அவனுக்கு அவசியம். இதற்கு சிங்களப் படையின் பயிற்சிக்காலம் ஆகக் குறைந்தது ஒன்பது மாதமாக்கப்பட வேண்டும். ஒரு வருடமே பொருத்தமானது. இவ்வாறாக பத்திற்கு மேற்பட்ட காரணங்களை அடுக்கிச் செல்லும் றோகன், இறுதியில் கூறுவதென்ன?" தொடர்ந்து போரிடக்கூடிய ஆற்றல்கொண்ட கரந்துறைப் படையொன்றோடு மோதுவதாயின் அப்படை, தனது பலத்தையும் மனஉறுதியையும் தொடர்ந்து பேணவேண்டும். அவ்வாறில்லாவிட்டால் எதிரியோடு நடக்கும் மோதல்களில் வெற்றியைச் சந்திக்காது இறப்பையே சந்திக்க நேர்ந்தால், தப்பியோடுதலே அங்கு நிகழும். இதுவே இப்போது வன்னியில் நடக்கின்றது."



இவ்வாறாக கேள்விகளையும் தாமே எழுப்பி விடைகளையும் தாமே கண்டு, வழிதெரியாத பாலைவனப் பயணிபோல சித்தம் அலைகின்றது. ஏனெனில், அது தனக்குத் தானே விலங்கு பூட்டி, தன்னைத்தானே சிறைவைத்து, தானே தன்னைச் சுற்றி முற்றுகையிட்டு, மூடப்பட்ட உலகமொன்றுள் வாழ்கின்றது. வழிகளை மூடுவதை, வழிகளைத் திறப்பதாக அது நம்புகின்றது. ஏனெனில் அது,

"விம்பு பெருகப் பெருக
நிலம் விழுங்கி நீண்டது —
நெஞ்செலும்பு மிதித்து
முகத்தில் மண்வேலியிட்டது
மண்ணறைக்குள் உயிரொளித்து
சாவைத் துரத்தும்
கனவை நெய்கிறது"

(என். டிமாஜிப்ரான்)

# யாழ்ப்பாண இடப்பெயர்வு

## ஒரு வரலாற்றுச்சம்பவம் களங்கப்படுத்தப்படுகிறது

அரசியல் - இராணுவ மற்றும் உயிர்காப்புப் பரிமாணங்களைக்கொண்ட ஒரு வரலாற்றுச் சம்பவத்தை, வரலாற்றுப்பிரக்ஞை அற்ற ஒருவர் நூலாக எழுதினால், அது எவ்வாறு அமையும் என்பதற்கு கலாநிதி கா. குகபாலன் எழுதிய ''யாழ்ப்பாண இடப்பெயர்வு'' சிறந்ததொரு உதாரணமாகும்.

இனஅழிப்பு நோக்கத்துடன் ஒரு ஆக்கிரமிப்புப்படை தமது ஊர்மனைக்குள் படையெடுத்து நுழையும்போது அங்கே வாழும் மக்கள் உயிர்காப்பிற்காக இடம்பெயர்ந்தோடுவது உலகின் வரலாற்று வழமை.

ஆயிரம் ஆண்டுகால வரலாற்றுப்பழமையுள்ள சிங்கள இனத்தின் இராணுவம் - தமிழர் சேனையின் எதிர்ப்பு வலுவையும் மேவிக்கொண்டு தமிழர் பகுதிக்குள் நுழையும்போது, தப்பிச்செல்ல வழியும் - பாதுகாப்பாக வசிக்க இடமும் இருந்தால் இடம்பெயர்ந்தோடுவது தமிழினத்தின் - இன்றைய - வாழ்வியல் யதார்த்தம்.

திருகோணமலையில் -மட்டக்களப்பில் - அம்பாறையில்-ஏன் - வடபுலத்திலும் இது அன்றாட நிகழ்ச்சியாகவே, இன்றுவரை, இருந்துவருகின்றது.

குடாநாட்டிலுள்ள சிங்களப் படையினர் முகாம்களை விரிவாக்க நகரும்போது - படைநகர்வின் இலக்குகளை விட்டோடுவது தமிழ் மக்களது போருக்குள்ளான வாழ்வின் முக்கிய அம்சமாக இருந்து வருகின்றது.

ஆயினும், வலிகாமம் இடப்பெயர்வு என்பது அளவில் பிரமாண்டமானது. செய்கையில் ஆச்சரியமானது. இழப்புக்களையும் - அவலங்களையும் தன்னுள் அடக்கியவாறு வரலாற்று ஏடுகளில் பொறிக்கப்பட்டுவிட்ட அற்புதமான அரசியல் நிகழ்ச்சியாகிவிட்டது.

வீரத்தை மூலதனமாக்கிக்கொண்டு நடாத்தப்பட வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்பட்டுவிட்ட ஒரு விடுதலைப் போராட்டத்தில், தியாகமும் - சோகமும் அந்த மக்களின் வாழ்வியல் யதார்த்தமாகிவிடும். மகிழ்ச்சியும் - துன்பமும் இரண்டறக்கலந்து மக்களை ஆட்கொள்ளும் வாழ்க்கையின் அர்த்தத்தை அளக்கமுடியாத சாதாரண அளவுகோல்களினால் எடைபோடப்படமுடியாத அசாதாரண நிகழ்ச்சிகளை-போருக்குள்ளான வாழ்க்கை - சந்திக்கும்.

விடுதலை என்ற உன்னத இலட்சியத்தை அடைவதற்காக இழப்புக்களையும் - சோகங்களையும் சகித்துக்கொண்டு- அதேவேளை முடிந்தளவு அவற்றைத் தவிர்த்துக்கொண்டு போராட்டத்தை வழிநடாத்த வேண்டிய சிக்கலான பணி போராட்டத் தலைமைக்கு உண்டு.

வலிகாமத்தைக் கைப்பற்றப்போகும் சமரில் சுமார் முப்பதினாயிரம் ( 30.000 ) பொதுமக்கள் கொல்லப்படலாம் என்பது சிங்களத்தளபதிகளின் கணிப்பாக இருந்தது. இந்தத் தகவல் அச்சில் பதியப்பட்ட உண்மை. இந்தளவு மக்கள் அழிவையும் அங்கீகரித்து 'ரிவிரச' நடவடிக்கைக்கு - சந்திரிகா அம்மையார் - அனுமதி வழங்கியிருந்தார்.

வலிகாமச்சமரின் ஒரு கட்டத்தில் கோப்பாயிலிருந்து உரும்பராய் - சுன்னாகம் ஊடாக சண்டிலிப்பாய் சந்தியை ஊடறுத்துச் செல்லும் பாதையை படையினர் நெருங்கிக்கொண்டிருந்தனர். 325ச. கி. மீற்றர் பரப்பளவைக்கொண்ட வலிகாமம், 150 ச.கி. மீற்றர்களாக சுருங்கியது. இந்தக் குறுகிய நிலப்பரப்பில் வலிகாமத்தின் ஐந்துஇலட்சம் மைந்தர்களும் குழுமினர். அதே நிலையில் சமரை நடாத்துவது விடுதலைப் போராட்டத்திற்கு பாதகமாகவும்-ஆக்கிரமிப்புப் படைக்கு சாதகமாகவும் அமையும்.

இதேசமயம், படைநகர்விற்கேற்றாற்போல் மக்கள் படிப்படியாக- மெதுவாக பாதுகாப்பிடம் நோக்கி நகர முடியாத அளவுக்கு ஒரு புவியியல் பூட்டு முன்னேயிருந்தது. தென்மராட்சிக்கான ஒரேயொரு பிரயாணப்பாதை என்ற வடிவில் அந்த நிலப்பூட்டு இருந்தது. அதுவும் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த கேந்திர நிலையில் அமைந்திருந்தது. தற்செயலாக அது எதிரியின் கைகளில் வீழ்ந்தால் எல்லாமே தலைகீழாகிவிடும். இத்தகையதொரு அபாயச் சூழல் அங்கே நிலவியது. இந்தநிலையில் வலிகாம மக்களின் உடனடி உயிர்ப்பாதுகாப்பு புலிகளின் கைகளிலேயே திணிக்கப்பட்டது.

உயிர்ப்பாதுகாப்பிற்காக உடனடியாக இடம்பெயர்ந்து தென்மராட்சிக்கு செல்லுமாறு புலிகள் அபாய அறிவிப்புச் செய்தனர்.

அந்த வரலாற்று இடப்பெயர்வு ஆரம்பமானது.

இடப்பெயர்வின் தன்மையை அறிந்து சிங்களம் திகைத்தது. செயலையும்- செயற்பட்ட முறையையும் கேள்வியுற்று உலக சமூகம் ஆச்சரியப்பட்டது. தமிழ் மக்களை விடுவிக்கப் படையெடுப்பதாகச் சொன்ன அரசபடைகளிடமிருந்து உயிர்ப்பாதுகாப்புத் தேடி ஒட்டுமொத்த மக்களும் அவசரமாக இடம்பெயர்ந்த நிகழ்ச்சி உலகிற்கு உண்மையை உணர்த்தியது. தமிழ்மக்களுக்கு சார்பாக ஐ. நா. செயலர் குரல் எழுப்புமளவுக்கு இடப்பெயர்வு நிகழ்ச்சியால் எமது விடுதலைப் போராட்டம் சர்வதேச கவனத்தை ஈர்த்தது. தமிழ்மக்களின் அரசியல் உறுதிப்பாட்டையும் உலகம் வெளிப்படையாகக் கண்டுகொண்டது.

உயிர் அழிவைத் தவிர்த்த செயலாக மட்டுமல்ல- இந்த இடப்பெயர்வு - தமிழரின் அரசியல் நிலைப்பாட்டையும் புலப்படுத்தியது.

ஆனால், ''யாழ்ப்பாண இடப்பெயர்வு'' என்ற இந்த நூலை எழுதிய ஆசிரியர், இடப்பெயர்வுக்கு காரணிகளாக இருந்த அரசியல்- இராணுவ மற்றும் உயிர்காப்புப் பரிமாணங்களை புறந்தள்ளிவிட்டு, இடப்பெயர்வு பற்றி புத்தகம் எழுதி முடித்துள்ளார். ஒரு வரலாற்று நிகழ்ச்சியையும் - அதன் விளைவுகளையும் நூலுருவாக்க முற்படும் ஒருவர் காட்டவேண்டிய அடிப்படை பொறுப்புணர்ச்சியை நூலாசிரியர் உதறித்தள்ளியுள்ளார்.

நூலின் முன்னுரையில் தனது செயலை இவ்விதம் பிரகடனப்படுத்துகின்றார்:

''இவ் இடப்பெயர்வின் அடிப்படைக்காரணி தமிழர்களின் அரசியல் உரிமையை வென்றெடுக்கப்படுவதுடன் தொடர்புடையதென்ற போதிலும் இந்நூல் அரசியற்காரணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது இடப்பெயர்வினால் மக்கள் அனுபவித்த - அனுபவித்து வரும் சமூக - பொருளாதார - கலாச்சார பிரச்சினைகளைப் பற்றியதாகவே உள்ளது''

என்று பொறுப்புணர்ச்சியற்றவகையில் பிரகடனம் செய்துள்ளார். இது காரணமாக ஒரு வரலாற்றுச் சம்பவத்திற்கு சிறுபிள்ளைத்தனமான முறையில் - விளக்கம் சொல்லி- வியாக்கியானங்கள் கொடுத்து - முடிவுகளையும் வலியுறுத்துகின்றார்.

**- சு. இரவீந்திரன் -**

இடம்பெயர்ந்த மக்களின் சேரிடத்தேர்வு தொடர்பாக நூலாசிரியர் இவ்வாறு எழுதுகின்றார்:

''இடப்பெயர்வாளர்களுக்கு தென்மராட்சியூடாக வடமராட்சி தொலைவில் இருந்தமையாலும் பெருமளவு உபசாரம் கிடையாது என்று எதிர்பார்த்ததினாலுமே மக்கள் வடமராட்சியை அதிகம் நாடவில்லை''

(பக்கம் 33)

''வன்னியில் உறவினர்கள் இருந்ததால் இடப்பெயர்வுக்கு கவர்ச்சி இருந்தது''

''வடமராட்சியிலும் பார்க்க வன்னிப்பகுதியையே கணிசமான மக்கள் விரும்பியிருந்தனர்''

''இடப்பெயர்வாளர்களை தென்மராட்சி வரவேற்றதைப்போல வடமராட்சியால் வரவேற்கமுடியாதிருந்தது'' ( பக்கம் 89 )

''வன்னி சென்றவர்களும் அங்கு வசதியாக வாழ்கிறார்கள் என்று கூறுவதற்கில்லை''

( பக்கம் 61 )

ஒரு இன அழிப்புப்படையின் கொலைவெறிக்கு அஞ்சி மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். எனவே சேரிடம் என்பது அவர்களின் உயிர்காப்பு விடயமாகின்றது. இந்தவகையில் சேரிடத்தேர்விற்கு இராணுவ யதார்த்தமே ஊக்கியாக அமைகின்றது. நூலாசிரியர் கூறமுனைவதுபோல ''தூரம்'' என்பதோ! மக்களின் விருப்பம் என்பதோ! உறவினர்களைத் தேடி என்பதோ! வசதியான வாழ்க்கையை நாடி என்பதோ! சேரிடத்தேர்வைத் தீர்மானிக்கவில்லை. வரவேற்புக் கிடைக்குமோ! கிடைக்காதோ! என்பதும் சேரிடத்தேர்வுக்கு உந்துசக்தியாக அமையவில்லை.




வன்னி வரவேற்கிறது என்பதற்காக அங்கு மக்கள் செல்லவில்லை. தென்மராட்சிக்குள்ளும் இராணுவம் புகுந்தால் வடமராட்சிப் பகுதி முற்றுகைக்குள்ளாகிவிடும் -தப்பியோட முடியாது போய்விடும் என்ற இராணுவ அச்சத்தைக் கருத்தில்கொண்டே அபாயம் நிறைந்த கிளாலிப் பயணத்தை மேற்கொண்டு - மலேரியாவும் பாம்புகளும் நிறைந்த - தண்ணீரும் வைத்திய வசதிகளும் குறைந்த வன்னிக்கு மக்கள் விரைந்தனர். வன்னிக்குள் இராணுவம் படையெடுத்தாலும், அதன் பரந்த நிலப்பரப்பு தமக்கு உயிர்காப்பை வழங்கும் என்று யதார்த்தபூர்வமாக சிந்தித்து - தூர இருந்த வன்னிக்கு மக்கள் சென்றனர்.

இவ்விதம் பாதுகாப்பு உத்தரவாதம் நாடி வன்னி சென்ற மக்களை பிரதேசரீதியாகவும் - வர்க்கரீதியாகவும் வகைப்படுத்தி நூலாசிரியர் கொச்சைத்தனமான வியாக்கியானங்களை வழங்குகின்றார்.

'' பலாலி - காங்கேசன்துறை - தீவுப்பகுதி மக்கள் பல இடப்பெயர்வுகளைச் செய்து கஸ்டப்பட்டவர்கள். இவர்கள் வன்னிக்கு இடம்பெயர விரும்பவில்லை'' (பக்கம் 43) என அடித்துக் கூறியுள்ளார்,

குறித்த சில ஊர்களைச் சேர்ந்த மக்கள் பலதடவைகள் இடம்பெயர்ந்துவிட்டனர் என்பது சோகமான உண்மையே. ஆயினும், இந்த ஊர்வாசிகள் யாழ்ப்பாண இடப்பெயர்வில் அதாவது வன்னி நோக்கிய இடப்பெயர்வில் அக்கறை காட்டவில்லை என்பது தவறான கருத்தாகும். தனக்குப் பரிச்சயமான சிலரது உதாரணங்களை ஒரு பொதுமுடிவாக அறிவிக்கமுயல்வது நூலாசிரியரின் பொறுப்புணர்ச்சியின்மையையே காட்டுகின்றது.

நூலாசிரியர் மேலும் எழுதுகின்றார் .....

'' இடம்பெயர்ந்த நிலையில் மரநிழல்களில்- பாடசாலைகளில் வாழ்ந்தோர் வன்னிக்குச் சென்றனர்... எங்கு வாழ்ந்தாலும் ஒன்றுதான் என்ற மக்கள் வன்னிக்குச் சென்றனர்'' என்று பொருண்மிய ரீதியில் நலிவுற்றிருந்த எமது மக்களில் ஒரு பகுதியினரையும் தனது குறுகியவாதக் கண்ணோட்டத்தால் - கொச்சைப்படுத்துகின்றார்.

பொருண்மியக்காரணிகளோ -ஊர்வாரியான அம்சங்களோ அல்லது எத்தனை தடவைகள் இடம்பெயர்ந்தார்கள் என்ற எண்ணிக்கையோ வன்னிக்குச்செல்லுமாறு தூண்டவில்லை. பல்லாயிரக்கணக்கான மாவீரர் -போராளிகள் குடும்பங்கள், போராட்ட ஆதரவாளர் குடும்பங்கள் மற்றும் இராணுவ ஆட்சியில் வாழ அஞ்சிய -வாழ விரும்பாத குடும்பங்கள்-என வன்னிக்கு விரைந்தவர்கள் பலவகைக்குள் அடங்குகின்றனர்.

இதேவேளை, தென்மராட்சிக்குள் இராணுவம் திடீரெனப் புகுந்ததைத் தொடர்ந்து- கிளாலிப்பாதை படையினர் கைகளில் வீழும் சந்தர்ப்பத்தில் வன்னிக்கு விரையமுயன்ற பல்லாயிரம் மக்கள் வேறுவழியின்றி பயணத்தைக் கைவிட்டனர். இதேசமயம், வன்னிக்கு இடம்பெயர விரும்பியிருந்தும் தவிர்க்க முடியாத தனிப்பட்ட காரணங்களுக்காக வன்னி செல்லாது தவிர்த்த மக்களும் பெருந்தொகையினர்.

இந்த வரலாற்று இடப்பெயர்வில் பங்கு கொண்டோரை நூலாசிரியர் பார்த்த விதம் அவர்களை அவமதிப்பதாகவுள்ளது. அவர் எழுதுகின்றார்...

" வந்தவெள்ளம் இருந்தவெள்ளத்தையும் அள்ளிக்கொண்டுபோனதுபோல வலிகாமம் மக்களுடன் இணைந்து தென்மராட்சி- வடமராட்சி மக்களும் வன்னி சென்றனர் "
(பக்கம் 147)

இது ஒரு மோசமான வர்ணிப்பு. மக்களை மந்தைகளாகக் கருதுகின்ற ஒரு மக்கள் விரோதக்கருத்து. இடப்பெயர்வின் யதார்த்தத்தை மறுதலிக்கின்ற ஒரு நச்சுக்கருத்து. இடப்பெயர்வின் அர்த்தத்தையும் – இடம்பெயர்ந்த மக்களின் உணர்வையும் கொச்சைப்படுத்துவதுபோல நூலாசிரியரின் இந்த வர்ணிப்பு அமைந்துள்ளது.

அரசியலைத் தவிர்க்கின்றேன் என்று நூலாசிரியர் பிரகடனப்படுத்த விரும்பினாலும் நூல் எங்கும், அவரது அரசியலான போராட்ட விரோத அரசியல் நீக்கமறநிறைந்து காணப்படுகின்றது.

தமிழர் ஊர்களைக் கைப்பற்றி – அழிக்கும் ஆக்கிரமிப்புச் செயல்களுக்கு நூலாசிரியர் பின்வருமாறு வியாக்கியானமளிக்கின்றார் —

" கடற்புலிகளின் தாக்குதல்கள் அதிகரிக்கவே, குடாநாட்டின் கரையோரக் கிராமங்களை தம்வசப்படுத்தும் நோக்குடன் 92ம் ஆண்டில் கீரிமலைப்பகுதியில் இருந்து சேந்தாங்குளம்- மாதகல் கரையோரம் வரை முகாம்கள் விரிவாக்கப்பட்டன. அதனால் அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர் " (பக்கம்19) என்று எழுதியுள்ளார்.

இதுபோல, யாழ்கோட்டை சுற்றாடலில் நடந்த இடப்பெயர்வு பற்றி இவ்வாறு கூறுகிறார் —

"1986ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக தமது பாதுகாப்பின் பொருட்டும் இயக்கங்களின் தாக்குதல்களுக்கு பதில் தாக்குதல் கொடுப்பதன் வாயிலாகவும் கோட்டைப்பகுதியான பறங்கித்தெரு – கொட்டடி – நாவாந்துறை - பொன்னம்பலம்மில் பகுதி மக்கள் இடம்பெயர்ந்தனர்" ( பக்கம் 19 )

மேலும் தொடர்கின்றார் ——

"ஆனையிறவு இராணுவமுகாம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து நடந்த பாரிய இராணுவ நடவடிக்கையால் வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு - இடக்கச்சியும் அவற்றைச்சார்ந்த பகுதி மக்களும் இடம்பெயர்ந்தனர்,.
( பக்கம் 19 )

இவ்வாறு மக்கள் இடப்பெயர்வுகளுக்கு போராளிகளின் தாக்குதல் நடவடிக்கைகளே காரணம் என்று நூலாசிரியர் நேரடியாகவே குற்றம் சாட்டுகின்றார்.

பலருக்கு இது உண்மைபோன்றே தோன்றலாம். உண்மையில், இது பிழையாக விளங்கிக் கொள்ளப்படுகின்ற ஒரு யதார்த்தமாகும். இக்கட்டுரையில் முன்பே குறிப்பிட்டதைப்போலவே போராட்ட அரசியலை நிராகரித்துவிட்டு சம்பவங்களுக்கு மேலெழுந்தவாரியான – வியாக்கியானங்களை செய்து- நுனிப்புல் மேயும் ஆராட்சி செய்கின்றார்.

இந்த நூல்மூலம் நூலாசிரியரின் அரசியல் மனது வெளிப்பட்டுள்ளது. அதாவது, தமிழர் மண்ணில் சிங்களப்படையினர் நிலைகொண்டிருப்பது தவறல்ல என்பதே அந்த அரசியலாகும். இந்தநிலையில் படையினரின் தாக்குதல் மற்றும் பதில் தாக்குதல்களின் விளைவாக இடம்பெறும் மக்களின் இடப்பெயர்வுக்கு படையினர் பொறுப்பல்ல, பதிலாக, போராளிகளே பொறுப்பென்று நூலாசிரியர் சூசகமாகக் கூறுகின்றார்.

படைநிலைகள் மீதான தாக்குதல்களை 'குளவிக்கூடுகலைப்பு' – 'சொறி தேய்த்தல்' போன்ற போராட்ட விரோதநோக்கு நிலைகளுடாகவே நூலாசிரியரும் விடுதலைப்போராட்டத்தை நோக்குகின்றார் (இச்சொற்பதங்களை நூலாசிரியர் நேரடியாகப் பயன்படுத்தவில்லை ).

இடப்பெயர்விற்கான அரசியல் காரணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது விட்ட நூலாசிரியரது செயலுக்கான காரணத்தை வாசகர்கள் இப்போது புரிந்துகொள்ளலாம்.

தனக்கு விருப்பமில்லாத போராட்ட அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுக்காது தவிர்த்துவிட்டு– அந்த அரசியலின் விளைவுகளான இழப்புகள் – இடப்பெயர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து -நுனிப்புல் மேய்வதுபோல– அந்த சம்பவங்களுக்கு விளக்கம் கொடுப்பதன் மூலம், தனக்கு விருப்பமான போராட்ட விரோத அரசியலை நூலில் வெளிப்படுத்துகின்றார். இடப்பெயர்வுக்கு காரணமான சிங்கள அரசையும் – அதன் படைகளையும் தப்பவைத்துவிட்டு போராளிகளைக் குற்றவாளிக்கூண்டில் நிறுத்த முயலும் வண்ணமே சம்பவ விளக்கங்களை - நூலாசிரியர் – தருகின்றார்.

இடப்பெயர்வை நோக்கி சுட்டுவிரல் நீட்டும் வேலையை நூலாசிரியர் பல கோணங்களில் செய்துள்ளார்.

இந்த இடப்பெயர்வு குடும்ப உறவுகளை – நட்புறவுகளை சிதைத்துக் குட்டிச்சுவராக்கிவிட்டது என்று, அவர் புலம்புகின்றார்.

ஒன்றாக இடம்பெயர்ந்த சகோதரக்குடும்பங்கள், முதலில், சமைத்து உண்டுவிட்டு, பின்னர், தனித்தனியாக உலைவைத்தனர் என்று பல கதைகளைக் கூறுகின்றார். இடப்பெயர்வால் நண்பர்களது உறவுமுறிந்த கதைகளையும் அடுக்குகின்றார். விறகுகள் – தேங்காய்களை தன்னைக்கேளாது எடுக்கக் கூடாது என்று உத்தரவு போட்ட காணியுரிமையாளரது கதைகளைச் சொல்கின்றார். இடப்பெயர்வுக்குப் பின்னர் இளையமகனின் அனுமதியில்லாமல் மூத்த மகனது மகளின் பூப்புனித நீராட்டு விழாவுக்குச் சென்ற தாய் - இளைய மகனால் நிராகரிக்கப்பட்டு கைதடி வயோதிபர் இல்லத்தில் தஞ்சமடைந்த கதையொன்றையும் கூறுகின்றார். கூட்டுக்குடும்பம்போல் ஒன்றாக இருந்துவிட்டு சில வாரங்களில் சச்சரவுப்பட்டுக்கொண்டு 'லாண்ட் மாஸ்றரில்' தனது பொருட்களை ஏற்றிக் கொண்டு தனிக்குடித்தனம்போன ஒருவருடைய கதையைச் சொல்கின்றார்.

—இப்படியாக சாதாரண விடயங்களைப் பெரிதுபடுத்தி நூலாசிரியர் - வர்ணிக்கின்றார். இவையெல்லாம் இடப்பெயர்வுகளின் விளைவுகள் என குற்றம்சுமத்துகின்றார். "இடப்பெயர்வால் பழைய பனஸ்தாபங்கள் மீள வெளிப்பட்டு வருவதையே தமிழர் சமுதாயத்தில் காணக்கூடியதாகவுள்ளது" என்று விரக்திப்பட்டுக்கொண்டுள்ளார்.

இடப்பெயர்வில் நடந்த கஸ்டங்களை– துன்பங்களை அர்த்தமற்றவைகளாகக் காட்டி விரக்தியுணர்வை ஏற்படுத்தவே நூலாசிரியர் முயற்சிக்கின்றார். பேரிடர்களுக்குள் நடந்த பெரும் நிகழ்ச்சிகளை– தனது அரசியலின் வசதிக்காக உதறித்தள்ளிவிடுகின்றார்.

இடப்பெயர்வைத் தொடர்ந்து ஐந்துலட்சம் மக்களும் தென்மராட்சியில் குவிந்தபோது, தென்மராட்சி திணறியது உண்மைதான். சுமார் இருபதாயிரம் குடும்பங்களை கொண்டிருந்த தென்மராட்சிக்குள் ஏறத்தாழ, ஒன்றரை இலட்சம் வலிகாமக் குடும்பங்கள் வந்துகுவிந்தன. பெரும்பாலும், தென்மராட்சியின் ஒருவீடு அல்லது ஒரு காணி ஐந்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு உறைவிடம் கொடுக்க வேண்டிய கட்டாய சூழலில் இருந்தது. தென்மராட்சியின் கிணறுகள்– வீடுகள்– மலசலகூடங்கள்– கடைகள் - பொருட்கள் ...... என எல்லாமே, ஏறக்குறைய, பத்துமடங்கான மக்களுடன் சேர்ந்து பகிரவேண்டிய நிர்ப்பந்தம் எழுந்தது.

இந்த வாழ்க்கைப்புயலை திடீரென எதிர்கொண்ட எமது மக்கள் திணறிப்போயினர். முடியுமா! முடியாதா! என்ற கேள்விகளுக்கு அப்பால் நிலைமை சிக்கலானது. எனினும், இந்த வாழ்வியல் பூகம்பத்திற்குள்ளும் எமது மக்கள் காட்டிய போராட்ட உறுதியை– சோதர உணர்வை– மனிதமாண்பை புகழ்ந்து பாராட்டுவதற்குப் பதிலாக, பூராயம் பேசுவதுபோல, அற்பவிடயங்களை நூலாசிரியர் ஆராட்சி செய்துள்ளார். நல்ல சம்பவங்கள்- உயர்ந்த உதாரணங்கள் என ஒன்று –இரண்டு விடயங்களை அவர் சொல்ல முற்பட்டபோதும், அந்த உயர்ந்த உள்ளங்களை பெயர்சொல்லிப் பாராட்டுவதற்குப் பதிலாக 'அந்தத்தெருவில் வசித்த ஒரு மருத்துவர்' - இந்த ஊரில் வாழ்ந்த ஒரு ஆசிரியர், என சினிமா கிசுகிசுக்கள் எழுதப்படும் பாணியில் பூடகமாகச் செய்திகூறி – அதையும் கெடுத்துள்ளார்.

இடம்பெயர்ந்தபின் இளவயதுக்காரர் பட்ட உளவியல் பாதிப்பை நூலாசிரியர் இப்படி விளக்குகின்றார்:

"பாடசாலை செல்லாமல்- பொழுதுபோக்கு வசதியில்லாமல்- படுக்கை வசதியில்லால்- பெற்றோர்கள் பிள்ளைகளை பலவகையிலும் அடக்கி வைத்திருந்தது என்பவை பிள்ளைகளின் உளவளர்ச்சியைப் பாதித்தன"

இங்கும் சின்னவிடயங்கள் பெரிதுபடுத்தப்பட்டிருப்பதையே காணமுடிகின்றது. இடப்பெயர்வை எந்தளவுக்கு குற்றம் சாட்டமுடியுமோ அந்தளவுக்கு நூலாசிரியர் பாடுபடுகின்றார் என்பதை நூல்முழுக்க காணலாம்.

இடப்பெயர்வு நூலாசிரியருக்கு கோபத்தை மூட்டியிருந்தால் அல்லது விரக்தியை ஊட்டியிருந்தால் அது வேறுவிடயம். ஆனால் தனது கோபத்தையும் - விரக்தியுணர்வையும் மக்களின் உணர்வாகக் காட்ட முயல்வது ஒரு ஆய்வு முறைமைத்தவறாகும்.

ஆறுமாதகால இடப்பெயர்வு வாழ்க்கை தமிழர் சமூகத்திற்கு பாரிய சமூக- பொருண்மிய - உளவியல் பாதிப்புகளை ஏற்படுத்திவிட்டதுபோலவே நூலின் உள்ளடக்கமும் - விவரணங்களும் உள்ளன. ஆனால் "வலிகாமத்திற்கு மீண்டும் திரும்பிச் சென்றதும் தண்ணீர்ப் பிரச்சினை உட்பட மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன " (பக்கம் 64 ) என்று சிறுபிள்ளைத்தனமாக ஆய்வு முடிவுசொல்லும் நூலாசிரியர், ஒருவருட காலத்தில் காணாமல் போகச்செய்விக்கப்பட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டோரைப்பற்றி என்ன சொல்லப்போகின்றாரோ!

ஈழத்தமிழரின் சர்வதேச புலம்பெயர்வுபற்றி சிங்கள இனவாதிகள் சொல்லும் கருத்தையே நூலாசிரியரும் கூறுகின்றார்.


" அரசியல் தஞ்சம் என்ற போர்வையில் பொருளாதாரத் தேட்டங்களை நாடி வெளிநாடு சென்றனர் " என்கிறார்.

வெளிநாடுகளில் வதியும் தமிழர்கள் இலங்கைத் தீவின் அரசியல் யதார்த்தத்தை எடுத்துச்சொல்ல ஒன்றுபடும் போது அவர்களது அரசியல் பலத்தை செல்லாக்காசாக்கும் நோக்குடன் மேற்குறித்தவாறு அவர்களை வரையறை செய்ய முற்படுவது பேரினவாதிகளின் வேலை.

( 11ஆம் பக்கம் பார்க்க)

## காலமும் காட்சியும்





# பாதங்கள் பார்த்து சுவடுகள் காத்திருக்கின்றன...

மணலாறு: தமிழீழப் போராட்ட வரலாற்றின் அழிக்கமுடியாத அத்தியாயம். புலிச்சேனையை அரவணைத்த கங்காருத் தொட்டில். தமிழீழ விடுதலை என்ற அக்கினியைத் தன்மடி மீது வைத்துச் சீராட்டிய தாய். அக்கினியின் அதிவீரமான எம் தலைவரைப் பொத்தி வைத்த புனிதபூமி எதிரியின் கணைகளையெல்லாம் தன் நெஞ்சில் தாங்கிய கவசம். குரங்குகளின் சில்மிசங்கள். நீரேரிகளின் மீது வெண்பூக்களைத் தூவியதுபோல் மிதக்கும் கொக்குகள். மனிதவாடை கண்டவுடன் தாவியோடும் கரடிகள். மலைக்குன்றென அசைந்தோடும் மூர்க்க யானைகள். உயர்ந்த மரங்களில் தாவியோடும் மர அணில்கள். தலைக்குமேல் குடைபிடிக்கும் பச்சையங்கள். அரணாக காத்து நிற்கும் கற்பாறைகள். திடீரென வெகுண்டெழுந்தோடும் காட்டாறுகள். இவைதான் எம் தலைவரை காத்துநின்ற இதயபூமி.

1989 இன் இறுதிக்காலம். "செஞ்சோலை" எனும் பெயர் சூடிய 5வது பயிற்சிமுகாம். இருநூறுக்கு மேற்பட்ட போராளிகளைப் புடம் போட்ட பாசறை. இப்பாசறையில்தான் விந்திரனும் பயிற்சியெடுத்தான். குறுளைகளை ஒன்றாக்கிய முதல் மூன்று பிரிவுகளில் விந்திரனும் ஓர் குறுளை. சிறந்த பயிலுனன். சிறந்த ஒழுக்கசீலன். தன்திறமையால் பொறுப்பாளரின் கண்களைத் தன்பால் ஈர்த்தவன். அடிப்படைப் பயிற்சி முடிந்தகையோடு விசேட பயிற்சிக்கு தெரிவானவன்.

ஒரு போராளியாக விந்திரனை நான் சந்தித்தது, என் நினைவுப்பரப்பில் குத்திய சிறு முள்ளாக இன்னும் என் இதயத்தை நெருடுகிறது. "அமுதகானம்", காட்டிலுள்ள ஒரு முகாமின் பெயர். காட்டிலுள்ள போராளிகளிற்கு உணவளிக்கும் அட்சயபாத்திரம். எம்முகாமிற்கான உணவை எடுக்கச்சென்றேன். அங்குதான் விந்திரனையும் கண்டேன்.

"எங்கேயோ பார்த்த முகமாகக் கிடக்கு" உயிரில் கலந்திருந்த நினைவுகளை மீட்டினேன். மூளைத் திசுக்களைக் கசக்கினேன். அவன் சிரித்தபடி என்னை அணுகினான். பதினைந்து வயதுப் பால்முகம், பால்முகத்தில் கரிய, சிறிய கண்கள். கண்களிலே மற்றவர்களை ஊடுருவும் திறன். நிமிர்ந்த உறுதியான நடை. அவனது உயரத்தின் அரைவாசியை விழுங்கியிருக்கும் அவனது ஆயுதம். மொத்தத்தில் அவனது தோற்றம் வசீகரமானது. என் மூளைச் செல்களின் போராட்டம் ஓய்ந்தது. அவன் யார் என்று அறிந்துகொண்டேன். இவன் வல்வெட்டித் துறைப் பெடியன்.

வல்வெட்டித்துறை: போராட்டத்திக்கு நீக்குச்சி கொடுத்த இடம். எத்தனையோ மாவீரர்களும் போராளிகளும் தவழ்ந்த கரையோர நகரம். எல்லாவற்றிற்கும் மேலாக எம் தலைவரை தாலாட்டிய தொட்டில். விந்திரனின் தொப்புள்கொடி உறவும் இங்குதான். 1974 சித்திரை மாதம் 19ம் திகதி-இது விந்திரனின் பிறந்த நாள். அம்மா புவனேஸ்வரி, அப்பா பஞ்சலிங்கம். இவர்கள் தங்கள் மகனுக்கு சூட்டிய பெயர் பாலமுரளி. மூன்று அக்காவுக்கு அடுத்ததாக இவன். ஒரு தம்பியும் உண்டு. ஆரம்பக்கல்வி சிவகுரு வித்தியாசாலை எனும் கல்விக்கூடம்.

வல்வெட்டித்துறை நகரத்தின் முதுகை இந்திய இராணுவச் சப்பாத்துக்கள் புண்ணாக்குவது வழமை. இராணுவம் இதயத்தைக் கிழித்துவிட்டுச் செல்லும். இரத்தம் பாய்ந்தோடும். அவ்விதயத்தின் சிறகுகளுக்குள்ளிருந்து புலிவீரர் வெளிவருவர். மீண்டும் புலிவேட்டைக்கு இராணுவ அரக்கர் வருவர். தருணம் பார்த்திருந்தனர் புலிகள்.

1989ம் ஆண்டு 8ம் மாதம். ஒருநாள், அரக்கனின் பல் ஒன்று உடைந்து இரத்தம் வடிந்தது. உடனே, "வல்லைப் படுகொலை" எனும் கோரதாண்டவம் அரங்கேறியது. வல்வை நகரம் சுடுகாடாகியது. தீ நாக்குகள் நகரத்தைக் கரியாக்கின. விந்திரனின் இதயத் திசுக்களிலும் ஒருசிறு பொறி தெறித்தது. "போராட்டமே எமை மீட்கும் மீட்பர்," போராட்டம் எனும் சிறகுக்குள் தன்னையும் புகுத்திக்கொண்டான். நடுக்கடலில் தத்தளிப்பவனுக்கு கட்டை கிடைத்தது போல் இவனுக்கு போராட்டம் எனும் கப்பல்கிடைத்தது. இறுகப்பற்றிக்கொண்டான்.

1990ம் ஆண்டு ஒருநாள். "மன்னாரிலிருந்து விசேட பயிற்சி முடித்துவிட்டு அணியொன்று வந்திருக்கின்றது" காற்று என் காதில் சேதி சொல்லிச் சென்றது. அவ்வணியில் விசேட பயிற்சி முடித்து விந்திரனும் ஒருவனாக வந்திருந்தான். அழைத்தெடுக்கப்பட்ட வைரத்திற்கு பட்டை தீட்டப்பட்டிருந்தது. என்னைக் கண்டதுமே அவன் முகம் பிரகாசமானது. அதே புன்னகை, அதே கண்கள். ஆனால் ஒரு வித்தியாசம். தோளிலிருந்த ஆயுதம் சிறியதாகத் தோன்றியது. நேற்றைய தூற்றலுக்கு துளிர்த்த புற்கள் போல் மீசையும் அரும்பியிருந்தது.

சக போராளிகளிடம் என் வாயைக் கொடுத்தேன். விந்திரனின் திறமைகளைப் புகழ்ந்தார்கள். மீனுக்கு நீச்சல் எப்படியோ, பறவைக்கு பறத்தல் எப்படியோ, அப்படியே விந்திரனுக்கு பயிற்சிகளும் என்றனர். இவனை அடிக்கடி சக போராளிகள் சீண்டுவது வழக்கம். ஆனாலும் இவனுக்கு கோபம் வராது. விந்திரனிடம் பேச்சுக் கொடுத்தேன். "எம் அணி சஜுவத்தை முகாம் தாக்குதலுக்குச் சென்றது. எங்களைச் சின்னப்பெடியள் என்று சொல்லி சப்ளையில விட்டுவிட்டினம்" இதைக்கூறும்போது அவன் முகத்தில் மின்னலைக் காணமுடியவில்லை. இருளையே காணமுடிந்தது.

விந்திரன் அதிஷ்ரக்காரன். எவருக்குமே அரிதில் கிடைக்காத பணி அவனைத் தேடி வந்தது. அவனது திறமைக்குக் கிடைத்த அரும்பணி எமது தேசியத் தலைவரின் மெய்ப்பாதுகாவல் அணிக்குத் தெரிவானான். எல்லாத் திசைகளுக்கும் ஒரே நேரத்தில் வெளிச்சம் தருகின்ற எம் தலைவரின் நிழலில் தவழும் பாக்கியம்.

போராட்டத்தேர் முன்னோக்கிச் சென்றுகொண்டேயிருந்தது இதுவரை காலமும் ஒரு சண்டைக்குக்கூட போகவில்லை எனும் கவலை அவனை வாட்டியது. பலவேகய II இராணுவ நடவடிக்கைக்கு எதிராகச் செல்லும் அணியில் விந்திரனும் ஒருவன். செய்தி இதயத்தை பூந்தவிராக் தடவியது உயிரைப் பூவால் வருடிச் சென்றது. நுரையீரலுக்குள் இனிப்பூட்டிய காற்றுப் புகுந்தது.



# போராளியின் குருதிச்சுவடுகள்

இயக்கச்சி: எமக்குச் சாதகமற்ற நிலப்பரப்பு. "ஓமர் முக்தார்" எதிரியை பாலைவனத்தில் எதிர்த்ததுபோல் சிறுசிறு பற்றைகளே எம் காப்பு. கரிய பெரிய களிறுபோல் எதிரியின் ராங்குகள். கார்த்திகை மாதத்து மழையென செல்கள். இவற்றிற்கு மத்தியில் விந்திரனின் கன்னிக்களம். பசித்திருந்தவனுக்கு பாலும் பழமும் கிடைத்தது. விந்திரனும் கிடைத்த சந்தர்ப்பத்தைத் திறமையாகப் பயன்படுத்தினான். பலரது பாராட்டுகளைப் பெற்றான்.


**அமுதசாகரன்**

அவனது திறமை எனும் மூலதனத்திற்கு மீண்டும் பரிசு எனும் "லொட்டரி" விழுந்தது. தேசியத் தலைவரின் உதவியாளர்களில் ஒருவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். "ஸ்பிறிங்" கட்டிலின் மீது ஏறிநின்று துள்ளும் குழந்தை போல் இவனது உயிரின் ஒவ்வொரு அணுக்களும் மகிழ்ச்சியில் துள்ளின. தலைவரின் சிறகுகளிற்குள் இருந்தபடியே அவரது புத்திமதிகளையும் அறிவுரைகளையும் கேட்கும் பாக்கியம். வானத்தின் கீழ் சில சதுரமைல்களையே அறிந்துவைத்திருந்தவன், எட்டுத்திசைகளின் விளிம்புகளுக்கே சென்றான்.

தாமரை இதழ்மீதிருக்கும் சேறுபோல் போராளிகளுக்கு இருக்கும் அந்நியமொழிப் பெயர்கள் எல்லாம் தூயதமிழுக்கு மாற்றப்படவேண்டும். விந்திரன், எழிலரசன் ஆனான். அவனது பண்புக்கும் உருவத்திற்கும் ஏற்றமாதிரி தேசியத் தலைவரால் சூட்டப்பட்ட பெயர் இது.

1995ம் ஆண்டு சந்திரிகாவின் பேச்சுவார்த்தை. விரைவிலேயே முகத்திரை கிழிந்தது. அரசின கோரமுகம் தெரிந்தது. மீண்டும் சண்டைக்குப் போகும் வாய்ப்புக் கிடைத்தது. சண்டைக்குப் போதல் என்பது; ஒரு போராளியின் மனதைக் குளிர்விக்கின்ற மர்மமழை. போராட்ட வாழ்க்கையின் ஆறுதல் மந்திரம். சிறுபிள்ளைக்குக் கிடைத்த இனிப்பு. இதயத்தை மயிலிறகால் வருடுகின்ற இன்பசுகம்.

எழிலரசனுக்கு ஓர் இலக்கை வேவுபார்க்கும் பணி தரப்பட்டது. இதில் ஈடுபடும்போது ஏற்படும் அனுபவம் புதுமையானது. இருட்டை நன்பனாக்கி, எதிரியின் முள்ளுக்கம்பியினூடாக தவழுவதும் உருளுவதும், எதிரி அறியாமலே அவனது தலைவாசலில் நடமாடுவதும், அவன் அறியாமலே அவனது மூக்காட்டை விலக்கி அவன் முகம் அறிவதும், இவையெல்லாம் சாதாரண மனிதரால் முடியாது. இரும்பையொத்த மனவுறுதி வேண்டும். எழிலரசனும் இரும்பையொத்தவன் தான். அவன் சென்றால் பழம் இன்றி வரும் நாட்கள் மிகக்குறைவு.



கப்டன் விந்திரன்/ எழிலரசன்

கடின மேற்பரப்பைக்கொண்ட சிப்பிக்குள் தான் ஒளிவீசும் முத்து உள்ளது. இவனுக்குள் மேலும் சில திறமைகள் ஒளிந்திருந்தன. இவன் ஒரு கலைஞனுங்கூட. தேசத்தின் புயல்கள்; கரும்புலிகளின் வீரத்தைச் சாற்றும் சலனப்படம். பொ. தாசனின் கைவண்ணத்தில் உருவான காவியம். மக்களின் இதயங்களைச் சிறுமுள்ளாகக் கீறி கண்ணீர் சிந்த வைத்த ஓவியம். இதில் ஒரு கரும்புலிவீரனாக எழிலரசன் நடித்திருந்தான்.

விடுதலைப் புலிகளின் தொடர் அதிரடிகளால் தென்னிலங்கையில் அரசுக்குப் பெரும் நெருக்கடி. நீர்ப்பாம்பென வழுக்கிச்செல்லும் தன் செல்வாக்கை உயர்த்தவேண்டும். எவ்விலை கொடுத்தாலும் பரவாயில்லை. ரத்வத்தையின் தலைமீது அப்போது கத்தி. முன்னோக்கிப் பாய்ந்தது சிங்களப்படை. புலிகளும் புலிப்பாய்ச்சலால் பதிலடி கொடுத்தனர். எழிலரசனுக்கும் பாயும் சந்தர்ப்பம் கிடைத்தது.

ஆனைவெட்டி அருணோதயாக் கல்லூரி; தமிழரின் கல்விக்கூடம்; சிங்களவனின் ஆயுதக்கூடமாக மாறியிருந்தது. புலிப்பாய்ச்சலின் ஓர் அங்கமாக இம்முகாம மீது பட்டப்பகலில் பாய்ந்தனர் புலிவீரர்கள். முன்னணிக்காவலரண் ஒன்றின்மீது கைக்குண்டொன்றை எறிந்து சண்டையைத் தொடக்கினான் எழிலரசன். இராணுவம் எலியெனப் பின்வாங்கி ஓடியது. ஆயுதங்களைப் புலிவீரர் அள்ளினர்.

மீண்டும் அரசாங்கம் கண்டனங்களுக்குள்ளானது. மாங்காய் பிடுங்கும் போது பால் கண்ணுள் தெறித்த கதையாகியது. பச்சை மரத்திலுள்ள கிளியை சொண்டை வைத்து அடையாளம் காணலாம். ஆனால் புலிவீரரை எப்படிக் கண்டுபிடிப்பது? ரத்வத்த தலையைச் சொறிந்தார். அடுத்த அடியை அவதானமாக வைக்கவேண்டும்.

மீண்டும் பாரிய படையெடுப்புக்கான ஆயத்தங்கள். காலுடைந்த சிங்களத்துக்குப் பச்சிலை வைத்துக் கட்டப்பட்டது. ஆயுதக்கப்பல்கள் கொழும்புத்துறைமுகத்தை நிறைத்தன. அங்குமிங்கும் இரும்புப் பறவை பறந்தது. கிழக்கிலிருந்தும சிங்களப்படை வடக்கிற்கு நகர்ந்தது. பலாலி பச்சையுடைத் திருவிழாவானது. புலிகளும் ஆயுதங்களைத் துடைத்து எண்ணையிட்டனர். தமிழர்சேனை தயாராகியது. எழிலரசன் ஒரு செக்சன் லீடராக நியமிக்கப்பட்டான். கடும் பயிற்சிகள் நடந்தன. ஒழுங்கு, வேகம், உருமறைப்பு, எல்லாவற்றிலும் திறமையாகச் செயற்பட்டு எழிலரசனின் அணி பாராட்டுகளைப் பெற்றது. எல்லோருக்கும் இவனது அணியே முன்னுதாரணமாகக் காட்டப்படுவது வழக்கமாகியது. கூட்டத்தில் முன்னணியில் பறக்கும் கொக்குப் போல, இவனும் எப்போதும் எல்லாவற்றிலும் முன்னணியிலேயே நின்றான்.

1995 10ம் மாதம் முசலாந்திகதி, இடிமுழக்கம் எனும் பெயரில் இடி இடித்தது. மழைக்காலத்து ஈசல்கள் போல் இராணுவம் முன்னேறியது. அச்சுவேலி, புத்தூர்ப் பிரதேசம் பச்சையுடையானது. இதற்கு எதிராக ஒரு தாக்குதல். எழிலரசன் இத்தாக்குதலின்போது விழுப்புண்ணுற்றான். இத்தாக்குதலில் நினைத்த வெற்றியை எம்மால் பெறமுடியவில்லை. ஆனாலும் எதிரிக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## குனியாதெம் தலை
## வளையாதெம் முதுகு
## சோகம் பாடாதெம் தெரு

# உலைக்களம்

- வியாசன்



பொன்தாதுப் பொடிதூவி
வந்தெழுவான் வானரசன்.
பாட்டுக்கு எதிர்ப்பாட்டுப்பாடிச் சிலம்பும் சேவல்கள்.
காலைப்பனியில் நீராடிக்களிக்கும் மரங்கள்.
மூழ்கிய தலையுணர்த்த மயிர்நீவும் பயிர்கள்.
தளைகவிழ்ந்துநாணி மலர்வுறும் பூக்கள்.
உடல்முறித்து வயலேகும் உழவுமாடுகள்.
எம்நிலமுற்றும் குதுவுறும்.
வேர்கொண்ட யாவும் விளங்கும்.
வைகறைவரும் ஒவ்வொருநாளிலும்
இப்படித்தான்
உய்வுற்றுயரும் எம்ஊர்.
இன்று?
கோவில்மணி அடிக்காது.
கோழியொன்றும் கூவாது.
வாசல்மரம் பூக்காது.
வயல்சிரித்துப் பேசாது.
மாடெழும்பிப் போகாது.
மடிநிரம்பிக் கனக்காது.
கோடையென்ன? மாரியென்ன?
குயிலெதுவும் பாடாது.
நேற்றுப்போல் இன்றோ இன்றுபோல் நாளையோ இன்றி
தினம் தினம் புதிதெனவாகிக்
''காலநதி'' பெருக்கெடுத்துப் பாய்கிறது.
அணையிட்டுத் தேக்கமுடியாத வேகப்பாச்சல்.
தாக்குப்பிடிக்க முடியாதன சரிந்துவிழ
பழையன கரைந்தும்.
புதியன நிமிர்ந்தும்.
நுங்கும் நுரையுமாகக் காலகங்கை பாய்கிறது.
நீச்சலடித்து நிமிர்கிறது உலகம்.
ஈழத்தமிழன் மட்டும்
கரையில்நின்று கால்நனைக்கக்கூட முடியாது
தூரத்திருந்து துடிக்கிறான்.
உலகில் எத்தனை மாற்றங்கள்.
நொடிக்கொரு நூதனமாய்ப் பூக்கிறது பூமி.
இருண்டகண்டத்துக்கே விடிந்துவிட்டது.
நேற்றுவரை ஆடையற்று அம்மணமாய்த் திரிந்த
ஆதிவாசிகளுக்குள்ளேயும் ''வேதியல்'' புகுந்துவிட்டது.
பாலைவன ஒட்டகக் கூட்டம் கூடச்
சோலைகளுக்கும், ஆலைகளுக்கும் சொந்தக்காரரானார்.
செவிவந்தடையும் செய்திகள் திகைக்கவைக்கின்றன.
விஞ்ஞானப் புதுமைகள் வியக்கவைக்கின்றன.
நாங்கள் மட்டும்
நரகிற்கிடந்துழலும் நரர்களானோம்.
''ஜென்ம சல்லாபங்கள்'' எதுவுமற்று
இடிவிழுந்த பனைபோலும் அடிசரிந்துள்ளோம்.
குரல்வளைகள் நெரிக்கப்பட்டு,
திசையெட்டும் அடைக்கப்பட்டு,
விடுதலை அவாவிய குற்றத்துக்காக
திறந்தவெளியிற் சிறையிருக்கிறோம்.
முள்முடியும்; பாரச்சிலுவையும் சுமக்கிறோம்.
வாசமிழந்து வாடிய மலர்களாய்
''தேஜஸ்'' இழந்து தெருவிற் கிடக்கிறோம்.
எவர்தானெம்மைக் கணக்கிலெடுத்தார்?
வையப்பரப்பெங்கும் வேர்கொண்ட இனத்தின்
உறவுகளிங்கே உலர்ந்து சருகாயின.
''நாமுளோம் அஞ்சற்க'' என ஒரு அசரீரி
கேட்குமென நம்பிக் காத்திருக்கிறோம்.
பன்றிக்குப் பால்கொடுத்த பரமசிவனுக்கும்
''பாரம் சுமப்போரே வாருமென்ற'' பரமபிதாவுக்கும்
எங்களுடன்மட்டும் என்ன கோபம்?
''மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல்லென்று
ஆனைகட்டிப் போரடித்த'' பரம்பரை
தீனிபொறுக்கித் திரிகிறது.
திருவோடும் கையுமாகத் தெருவில் நிற்கிறது.
பகைவனிடம் கையேந்திப் பிடியரிசி வாங்கியே
உலைமூட்டும் விதியெமக்கு.
உரப்பையுடன் ஊர்வலம் சென்று
இரப்பை நிரப்பும் இழிநிலை வந்தாச்சு.
வெற்றிவிழா அணிவகுப்பில் நிமிர்ந்தும்,
நிவாரண ஊர்வலத்தில் குனிந்தும்,
எமக்கு இரண்டகவாழ்வு.
காலநதிக்கென்ன? அது வேகமெடுத்துப் பாய்கிறது.
ஈழத்தமிழனை எவர்தான் கணக்கிலெடுத்தார்?
விடுதலைக்கான வழியில் எத்தனை முட்கள்?
சலிப்புற்றுச் சரியாதே தமிழனே!
உலகமொருநாள் உன்பக்கம் திரும்பும்.
உறவுக்கிளைகளில் ஊஞ்சல்கட்டி
உன்னைவைத்து ஆட்டும்.
எம்முகில்கள் எங்கெங்கோ உலவிடினும்
மழைபொழிவதுன் தலையிலென நம்பு.
ஜெனிவாவில் திரண்ட ஜென்ம உறவுகளே!
'உள்ளோம்நாம்' என்ற உரத்தகுரல்கள்
வன்னிவரை வந்து வாழ்த்தின.
போராடுமெமக்குப்போதுமிது.
இனியும் குனியாதெம் தலைகள்.
வளையாதெம் முதுகு.
யார்காலிலும் பணியாதெம் வீரம்.
சோகம் பாடாதெம் தெருக்கள்.
வேரறுந்து முளைகருகாதெம் விடுதலைப்போர்.
''இலக்கு'' எட்டும்வரை எம்கால்கள் நடக்கும்.
விழுந்தாலும் எழுந்து விரைவோம்.
மீண்டுமொரு நரவேட்டைக்காகக்
கத்திகள் தீட்டப்படுகின்றன.
குதிரைகள் திரையிட்டுச்சரிபார்க்கப் படுகின்றன.
வில்லுக்கு நாணேற்றப்பட்டு
அம்புமுனைகள் கூராக்கப்படுகின்றன.
கோரவாய் ஏவற்பிசாசுகள் உருவேற்றப்பட்டு
''சோமபானம்'' பரிமாறப்படுகிறது.
குடல்கிழிக்கவும் குருதி குடிக்கவுமெனத்
நடப்புடல் பயிற்சி நடக்கிறது.
அடிக்கடி தேரில்வந்திறங்கும் ''சேனாதிபதிகள்''
''உற்சாக மந்திரத்தை உச்சாடனம்'' செய்கின்றனர்,
புஷ்பகவிமானங்களும் பீரங்கி பொருத்தப்பட்டுத்
தயார்நிலையில் தரித்துளது.
வெளியே தெரியாது திரையிடப்பட்ட கூடாரத்துள்ளே
இரவும் பகலும் நடக்கிறது பெரிய முயற்சி.
மாரிமழைக்குள்ளே நடக்கவுள்ள காரியமென்ன?
உன்னியொரு எக்கெக்கி
''மாங்குளம் பிடிப்பது''
''கண்டிவீதிக்கு என்னவிலையும் கொடுப்பேன்''
இது ரத்வத்த.
''கண்டிவீதிக்கு என்னையே கொடுப்பேன்''
இது புலிவீரம்.
சத்தியமே ஜெயம். ○

( 03ஆம் பக்கத்தொடர்ச்சி )

## சுதந்திர எழுச்சி...

பேரினவாதப் பத்திரிகையாளர்கள் செவ்விகண்டபோது, புலிகள் இயக்கத்தை தடைசெய்வது தொடர்பாகவும் – புலம்பெயர்ந்த தமிழர்களின் போராட்டப்பங்களிப்புக்கு எதிராகவும் மேலைத்தேய அரசாங்கங்கள் நடவடிக்கை எடுக்கமாட்டாதா! என்ற கேள்விகளுக்கு ‘அவ்விதம் செய்யமுடியாது’ என்று நெற்றியில் அடிக்காற்போல் தூதர்கள் அளித்த பதில்களால் பேரினவாதிகள் சீற்றமடைந்துள்ளனர்.

தமிழர்களது போராட்டத்திற்கு அனுதாபம் காட்டும் மேலைத்தேய அரசாங்கங்களை மட்டுமல்ல – அங்கிருந்துவந்து செயலாற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் பலவும் தமிழருக்கு ஆதரவுகாட்டுகின்றன என்று குற்றம் சுமத்தி – பேரினவாதிகள் – கண்டனவிமர்சனம் செய்கின்றனர்.

முன்பெல்லாம் பேரினவாதிகளால் புகழப்பட்ட கதிர்காமர்தலைமையிலான பேரினவாதப்பிரச்சாரப்படை, இப்போது கண்டனத்திற்குள்ளாகி வருகின்றது. மேலை நாடுகளில் புலிகளை தடைசெய்யும் விடயத்தில் அவர்கள் தோல்விகண்டுவிட்டனர் என்று குற்றம்சுமத்தப்படுகின்றனர். இந்தத் தோல்விக்கு சிறிலங்காத் தூதர்களின் செயலின்மையும் - திறமையின்மையுமே காரணம் என்று சிங்களப்பத்திரிகைகள் கூறுகின்றன. உண்மை இதுவல்ல. ஒடுக்குமுறையை நீண்ட நாட்களுக்கு நியாயப்படுத்த முடியாது; ஒடுக்குமுறையாளர்கள் நீண்டகாலத்திற்கு வெற்றிக்களிப்பில் இருக்கமுடியாது. புலம்பெயர்ந்த தமிழர்கள் அரசியல் விழிப்புணர்வுபெற்று எழுச்சியடையும்போது - பேரினவாதத்தின் பொய்ப்பிரச்சாரம்– சர்வதேசசமூகத்தின் முன்பும் அம்பலப்பட்டுப்போகும். இப்போது அதுதான் நடைபெறத்தொடங்கியுள்ளது.

உலகின் பல விடுதலைப்போராட்டங்கள் வெற்றி இலக்கை நோக்கி வேகநடைபோட, அந்த, அந்த இனங்களின் புலம்பெயர்ந்த மக்கள் உதவினர் என்பது வரலாறு.

இஸ்ரேல் நாட்டை உருவாக்கும் யூதர்களின் விடுதலைப்போராட்டத்தின் போதும் புலம்பெயர்ந்த யூதர்கள் ஆற்றிய போராட்டப்பங்களிப்பு பிரமாண்டமானது. போராட்டத்திற்குத் தேவையான நிதி முழுவதையும் புலம்பெயர்ந்திருந்த யூதசமூகத்தினரே வழங்கியிருந்தனர். அத்துடன், ஆயுதங்களை – வெடிபொருட்களை கொள்வனவுசெய்து போராளிகளிடம் அனுப்பியும்- போராளிகளுக்கும் போராடும் நிலத்தில் வாழ்ந்த மக்களுக்கும் மருந்து உட்பட அத்தியாவசியப் பொருட்களை அனுப்பிவைத்தும், போராட்டத்தை வெற்றியைநோக்கி நகர்த்திவிட்டனர், இறுதியில் யூதர்கள், தமது விடுதலைப்போராட்டத்தில் வெற்றிபெற்றனர், இஸ்ரேல் என்ற யூதநாட்டை உருவாக்கினர்.

இதுபோன்றே எரித்திரியப் போராட்டவரலாறும் உளளது. ஆக்கிரமிப்பாளர்களான எதியோப்பியஅரசின் பொருண்மியத்தடை மற்றும் இராணுவ அனர்த்தங்களால் நெருக்கடிக்குள் சிக்குண்டிருந்த எரித்திரியப் போராட்டத்தை முன்னோக்கி நகர்த்திவிட புலம்பெயர்ந்துவாழ்ந்த எரித்திரியர்கள் செய்த பொருண்மிய- அரசியல் பங்களிப்பு போராட்டவெற்றிக்கு பின்புலமாக இருந்தது. இறுதியில எதியோப்பியப்படைகள் எரித்திரியமண்ணிலிருந்து அடித்து விரட்டப்பட்டன. எரித்திரியா சுதந்திரநாடாகியது. பலஸ்தீன விடுதலைப்போராட்டத்திற்கு புலம்பெயர்ந்த பலஸ்தீனியர்கள் செய்த பங்களிப்பு மிகமுக்கியமானது. இதுபோன்றே வடஅயர்லாந்திலுள்ள ஐரிஸ் மக்களின் போராட்டத்திற்கும் வெளிநாடுகளில வசித்த ஐரிஸ் மக்களின் போராட்டப்பங்களிப்பு முக்கியமானதாக இருந்து வருகின்றது.

விடுதலைப்போராட்டங்களுக்கு ஆதரவாக சர்வதேச அபிப்பிராயத்தை உருவாக்கும் முக்கியபணியின் வெற்றி, பெரும்பாலும், புலம்பெயர்ந்த மக்களின் அரசியல் விழிப்புணர்விலும் - அரசியல் செயற்பாடுகளிலுமே தங்கியிருக்கின்றது. ஆக்கிரமிப்பு அரசுகளுக்கு எதிராக சர்வதேசரீதியில் அரசியல் அழுத்தம் கொடுக்ககூடிய ஏதுநிலைகளை தோற்றுவிக்கக்கூடிய சக்தியை புலம்பெயர்ந்த மக்கள் கொண்டிருப்பர்.

புலம்பெயர்ந்துவாழும் ஈழத்தமிழர்களும் இத்தகைய பலம்வாய்ந்த அரசியலசக்தியாகவே திகழ்கின்றனர். புலம்பெயர்ந்துவாழும் ஈழத்தமிழர்களின் சக்தியையும் – மற்றும் பலநாடுகளில் வாழும் தமிழ்மக்களின் பலத்தையும் எடைபோட்டுப்பார்த்துவிட்டே யூதர்களைப்போல சக்திமிக்க ஒரு சர்வதேசசிறுபான்மை இனம்தான் தமிழர்கள் என்று சிங்களத்தின் குள்ளநரியான ஜே.ஆர். ஜெயவர்த்தனா கருத்துத்தெரிவித்திருந்தார்.

புலம்பெயர்ந்து வாழும் எமது மக்களது போராட்டப்பங்களிப்பு அண்மைக்காலமாக, அதிகரித்துவருகின்றது. சிங்கள அரசுக்கு எதிராக எமதுமக்கள் வெளிநாடுகளில் நடாத்தும் கண்டனக்கூட்டங்கள் - ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் போன்றவற்றால் ஈழத்தமிழரின் அவலநிலையை சர்வதேசசமூகமும் அறிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படுகின்றது. அத்துடன் சிங்கள அரசின் தமிழினவிரோத செயற்பாடுகளையும் உலகசமூகம் அறிந்துகொள்ள இவை உதவுகின்றன. O



## விதியா....
## அது உன் விதி

தமிழின உரிமைமீட்புப் போரிலே
என்னுயிர் துறப்பது எனக்கு வரலாறே- அறிவேன்.
சாவின் சிறப்பும் அதுவென
உணர்வேன் – இருந்தும்
என்னுயிர் துறக்கப் பயம்.
எப்போதாவது என்னுயிர்
என்னைவிட்டுப் பிரியும் – அறிவேன்.
என்னசெய்ய – இன்னும்
என்னுயிர் பிரிவதை எண்ணிப் பயம்.
எறிகணைகளும்
எதிரி விமானங்களும்
என்றோ ஒருநாள்
என்னுயிரைப் பறிக்கலாம் – அறிவேன்.
எனினும் – இன்னும்
என்னுள் வீரம் பிறக்குதில்லையே.
இருண்டுவிட்டால் ......
வெளியில் செல்லப் பயம்.
பேய் வரும் என்று – என்
பெற்றோர் ஊட்டி வளர்த்ததால்.
அந்த நினைவு அழியுதில்லையே.
முயல்கிறேன் – ஆனால்
என்னால் இயலவில்லையே.
என்னுள் பயம்
எப்படிக் குடிகொண்டது?
வீட்டினுள் வாழ்ந்தேன் – எனைச்
சுற்றிலும வேலிகள் பல.
வீட்டார் இட்டதைத் தவிர – நான்
வேறு செய்ததில்லை.
உறவுக்குப் பயம் – எனக்கு
ஊருக்குப் பயம்.
காறி உமிழ்பவர் பலரிருப்பர் – நான்
அவர்களுக்குப் பயம்.
வேலியால் எட்டிப் பார்த்தால்
வீதியால்செல்பவர்
என்ன நினைப்பார் .... –
கூரையில் ஏறப்பயம்
குடத்துடன் தண்ணீரள்ளப்போனால் ........
தலை நிமிர்ந்து நடக்கப்பயம் - இப்படியே
ஆயிரம் பயம்.........பயம்.
அப்போதெல்லாம் எனக்கு நானே பயம்.
வாழ்ந்த மண்ணில் - குண்டு
வீழ்ந்தது - எதிரியின்
வேட்டொலி கேட்டது.
ஊர் பயந்ததால் – உறவுகள்
வேரிழந்தன.
உறியில் உள்ளதை மட்டும் எடுத்துக்கொண்டு
ஊர் துறந்தது.
ஓடினோம் ......
தேடினோம் அகதி வாழ்வை.
வீதியோரம் விழித்திருந்தோம்.
நிம்மதியைத் தொலைத்திருந்தோம்.
அப்போதும் அந்தப் பேய் இருட்டு.
ஆனால் பீதியுறவில்லை - ஏனெனில்
இழப்பதற்கு எதுவும் இல்லை ......
எம் முயிரைத்தவிர.
உணவு இல்லாப் பஞ்சம்
எமை வாட்ட .......
உணர்வு இலாத் தமிழன் என
எவர் சொன்னார்.
உரிமையில் ஆசையிருக்கு
உள்ளத்தில் உணர்விருக்கு.
உண்மையில் எம்மக்களில் அன்பிருக்கு.
உரிமையை விட உயிர் பெரிதில்லை - அறிவேன்.
அடிமை வாழ்வை விட சாவது மேலானது
அதையும் அறிவேன்.
என்னுடன் நான் போராடி - ஒரு
இனிய முடிவெடுத்தேன்.
விதியா ...........
பகையே! உனக்கு அதுதான் விதி.
நாம் உயிர்வாழப் போர் வேண்டும்.
எம் இனம் வாழ - நான் போராட வேண்டும்.
எம் எல்லைகளை வகுக்கின்ற வல்லமை -
பொறிக்கும்
போர்க்கருவிகளுக்குத்தான் உண்டு.
தேசத்தின் விடிவுதான் - எம்
சோகத்தின் முடிவு.
அப்படியானால் .......
இப்போது நான்
மாங்குளத்திற்கு மகுடம் சூடும்
எம்மண்ணாலான காப்பரணினுள்
காத்திருக்கின்றேன் - கையில்
துப்பாக்கியுடன் – என்
கண்களில் பெரும் கனலேந்தி.
அப்போது கேட்ட அதே வேட்டொலிகள்
இப்போது மிக அருகே - என்
செவிகளுக்கு இனிமையூட்டிக்கொண்டு.
எறிகணைகளின் இரைச்சல்களை
இரசிக்கின்றேன்.
போர் விமானங்களின் ஓசையும்
ஒரு வகைச் சங்கீதமென இருக்கும்.
இருளுக்குள் இருளாக
எதிரியின் வருகையை
எதிர்பார்த்த வண்ணம் நான்.
இப்போதெல்லாம்.......
பயத்திற்கு என்னை அணுகப்பயம்.
வழியா பிடிக்கப்போகின்றாய்?
வா
வாசலில்தான் நாமும்
வழியில்தான் எம் விழியும்
வெற்றியா வேண்டும் ....... ?
வா
அந்த வெறியுடன்தான் நாமும். O

- போராளி கோமனா
மாங்குளம்.

(07 ஆம் பக்கத்தொடர்ச்சி)

## யாழ்ப்பாண....

புலம்பெயர்வுக்கான அரசியல் காரணிகளை புறந்தள்ளியதால் நூலாசிரியரும் அவ்வாறே வலியுறுத்துகின்றார்.

சிங்களம் மட்டும் சட்டம் – தரப்படுத்தல் - தமிழர் மீதான தொடரான வன்முறைகள் – நீண்டபோர் என்பவற்றால் தமிழினத்தின் பொருண்மிய வாழ்வை சிங்கள அரசு திட்டமிட்டு அழித்துவருகின்றது. தமிழ் இன அழிப்பின் ஒரு அங்கமாகவே இந்த பொருண்மிய நாசத்தை அது உண்டுபண்ணுகின்றது.

தமிழருக்கு வேலைவாய்ப்பில்லை - அவர்களது விவசாயம், மீன்பிடி சேரழிந்துள்ளது – ஒருபுறம் அரசின் பொருண்மியத்தடை – சிறுகைத்தொழில் – அபிவிருத்தி என்பன முற்றாக இல்லாமை என்பவற்றால் தமிழர்தம் குடும்ப பொருளாதாரத்தை ஓட்டவும், சில சமயங்களில் உயிர்ப்பாதுகாப்பை நோக்காகவும் கொண்டு சர்வதேசத்துக்கு புலம்பெயர்ந்தனர்.

தமிழரின் இந்தப் புலம்பெயர்வுக்கு தமிழ் மக்கள் மீதான இனவாத ஒடுக்குமுறைதான் காரணமேயல்லாது பொருளாதாரத் தேட்டங்களை நாடியல்ல. அரசியல் பின்புலத்தில் நடந்த இந்த சர்வதேச புலம்பெயர்வு தமிழினத்தின் பொருண்மிய வாழ்வுக்கு புத்துயிர் ஊட்டிவருகின்றது என்பதை மறைப்பதற்கில்லை.

எனவே, வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்த மக்களை 'அரசியல் போர்வையில்' உள்ள பொருண்மிய தேடலாளர்கள் என்று வரையறை செய்வது தவறானது. நுனிப்புல் மேய்வதைப் போன்றது.

நூலாசிரியரின் அரசியல் பார்வை மட்டுமல்ல சமூகப்பார்வையும் தாறுமாறாகவே உள்ளது.

கூட்டுக்குடும்பம்போல் சேர்ந்துவாழ்ந்த அந்த இடப்பெயர்வுச் சூழலில் உருவான குடும்பங்களுக்கிடையேயான பிரச்சினைகளுக்கு பெண்களே காரணம் என்று குற்றம் சுமத்துகின்றார்.

'' ஆயிரம் ஆண்களோடு வாழலாம் இரண்டு பெண்களோடு வாழமுடியாது என்பர் நம்மவர் '' —... ( பக்கம், 61 ) என்று கூறி அதற்கான நியாயவாதங்களையும் கூறுகின்றார்.

நூலாசிரியரது சமூகப்பார்வையின் ஆழத்தை அவரது இந்த எடுகோள் துலாம்பரமாகக் காட்டுகின்றது.

பெண்மையை குற்றங்காணும் இத்தகைய ஆண்மேலாதிக்க நீதியை மாற்றியமைக்க, கண்டசாலா காலத்து சினிமாக்கவிஞன் எடுத்த முயற்சியை இந்த நூலாசிரியருடன் பொருத்திப் பார்ப்பது நல்லது.

சந்தேகம் எனும் ஒரு சரக்கு – அது
பெண்களின் மனதிலேதான் இருக்கு –...

என்று ஆண் பாட்டை ஆரம்பிக்க - பெண் இடையில் புகுந்து .....

சந்தேகம் எனும் ஒரு சரக்கு – அது
ஆண்களின் மனதிலேதான் இருக்கு—

என்று எதிர்வாதம் செய்ய- இறுதியில் ... இருவரதும் இணைந்து

சந்தேகம் எனும் ஒரு சரக்கு - அது
சகலர் மனதிலேயும் இருக்கு... ....என்று பாட்டை முடித்து ஆணையும் பெண்ணையும் மனிதர் என்ற பொதுமையில் காட்ட முயன்ற முற்போக்குச் சிந்தனையை சினிமாவுக்கு கவிதை எழுதிய கவிஞன் ஒருவன் வெளிப்படுத்தியுள்ளான். ஆனால், ஒரு வரலாற்றுச் சம்பவத்தை எழுதிய கலாநிதி பட்டம் பெற்ற நூலாசிரியரோ ஆயிரம் ஆண்களோடு வாழலாம் இரண்டு பெண்களோடு வாழமுடியாது . என்று பெண்விரோதக் கருத்தை நிலைநிறுத்த வலிகாம இடப்பெயர்வை பயன்படுத்தியது வேதனையான விடயமாகும்.

இங்கு ஒரு விடுதலைப்போராட்டம் நடைபெறுகின்றது. அதுவும் ஆயுதம் தாங்கிய விடுதலைப்போராட்டம். எனவே இந்த மண்ணில் இரத்தமும் - கண்ணீரும் - தியாகமும் – சிலிர்ப்பும் சேர்ந்தே இருக்கும். போராடும் மக்கள் மீது அவலங்களை விதைத்து ஆயுதப்போராட்டத்தை நசுக்க எதிரி முயற்சி செய்வான். அவன் அழிவுகளை விதைத்தால் நாம் விரக்தியடையக் கூடாது. அந்த அவலங்களைப் பார்த்து எமது மக்கள் ஓர்மம் பெறத்தக்கவகையில் நாம் எதிர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிடின் எதிரியின் நோக்கம் நிறைவேறிவிடும்.

வலிகாம இடப்பெயர்வு தமிழரின் விடுதலைப்போராட்டத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுவிட்ட ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகிவிட்டது. இந்த வரலாற்றுச் சம்பவம் அரங்கேறிய போது சோகமும் - அவலமும் யாழ் மண்ணில் பரவியது. இந்த சோகங்களை - அவலங்களை சொல்லும்போது அதன் அரசியல் பரிமாணத்தில் சொல்லப்படவேண்டும். மக்கள் ஓர்மமடையும் வண்ணம் சொல்லப்பட வேண்டும். இதுதான் சமகால நூலாசிரியர்கள் – இலக்கியவாதிகளின் வரலாற்றுக் கடமையாகும்.

அவலங்களையும் - இழப்புகளையும், ஓர்மத்தை ஊட்டும் உந்துசக்திகளாக, உலக விடுதலை இயக்கங்கள் மாற்றி வைத்திருப்பதை வரலாற்றில் காணலாம்.

இஸ்ரேல் நாட்டை அமைக்க யூததேசபக்தர்கள் ஒரு ஆயுதம் தாங்கிய இயக்கத்தை உருவாக்கியபோது - தங்களது வரலாற்று அவலம் ஒன்றை - விடுதலை உணர்வை ஊட்டும் ஓர்மக்கியாகப் பயன்படுத்தியிருந்தனர்.

அது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அவலக்கதை.

ரோம சாம்ராச்சியப்படைகளால் யூத இராச்சியத்தின் படைகள் தோற்கடிக்கப்பட்டுக்கொண்டு போன வேளை அது. எஞ்சிய யூத வீரர்கள் அனைவரும் 'மசாடா' என்ற இடத்தில் கூடினர். மசாடாவிலேயே தங்கிநின்று சாகும்வரை சண்டையிடுவது என்று சத்தியம் செய்தனர். சமர் கடுமையாக நடந்தது. இறுதியில், யூதப்படை அங்கே ஒட்டுமொத்தமாக அழிக்கப்பட்டது. இந்த தோல்வியின் பின்னரே யூதரின் 2000 வருடகால அகதி வாழ்க்கை ஆரம்பமானது.

இஸ்ரேல் நாட்டை அமைக்க 1940 களில் போராடிய யூத இயக்கம் - தனது வீரர்களுக்கு ஓர்மத்தை ஊட்டும் இலட்சியகோசமாக 2000 வருடங்களுக்கு முன் நடந்த அந்த வரலாற்று அவலத்தையே தேர்ந்தெடுத்திருந்தது.

'மசாடாவை நாம் மறவோம்' என்பதுதான் அந்த இலட்சிய கோசம்.

தமது முன்னோரின் படை ஒட்டுமொத்தமாக அழிக்கப்பட்டு - தமது ஆட்சி பறிக்கப்பட்டு- தமது மக்களை சர்வதேச அகதிகளாக்கிய அந்த சம்பவத்தை அடிக்கடி நினைவூட்டிக்கொண்டு இஸ்ரேல் நாட்டை அமைக்க போராடினர்- வென்றனர்.

எமது விடுதலைப்போராட்டத்திலும் அத்தகைய அம்சம் உள்ளது.

83 கறுப்பு யூலையையும் - வெலிக்கடைச் சிறைப்படுகொலை உட்பட அப்போது நடந்த கொலைவெறிச்செயல்களைக் கேள்வியுற்று தமிழ் இளைஞர்கள் ஓர்மம் பெற்று ஆயுதப் போராட்டத்தில் அணி அணியாக இணைந்த வரலாற்று நிகழ்ச்சியையும் இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

1958இல் தமிழர் மீதான வன்முறையில் நடந்த அவல சம்பவங்களே தன்னை ஓர்மமடையச் செய்தன– விடுதலைக்காகப் போராடத்தூண்டின என்று தலைவர் பிரபாகரன் கூறியுள்ளார்.

வலிகாம இடப்பெயர்வும் இத்தகையதொரு ஓர்ம உணர்வை ஊட்டக்கூடிய அரசியலையே அடித்தளமாகக் கொண்டுள்ளது. ஆனால், 'யாழ்ப்பாண இடப்பெயர்வு' நூல் எழுதியவர், அதையொரு அவலமான சோக சம்பவமாக எழுதி – வாசிப்போரை சலிப்படைய வைத்துள்ளார் – விரக்தியடையத் தூண்டியுள்ளார்.

இது ஒருபுறமிருக்க——

இயற்கையின் அனர்த்தத்தால் நிகழ்ந்த சம்பவங்களை ஒருவர் உடனடியாக நூலாக்கலாம்.

ஆனால், சமூகத்தை உலுக்கிய ஒரு அரசியல் நிகழ்ச்சி நடந்து நீண்ட பல வருடங்களுக்குப் பின்பே அதுபற்றி நூல் எழுத முனைய வேண்டும் என்று வரலாற்று அறிஞர்கள் கூறுவர். அப்போதுதான் விருப்பு – வெறுப்பு இன்றி சம்பவங்களை சரியாக எடைபோட முடியும். 'யாழ்ப்பாண இடப்பெயர்வு' என்ற இந்த நூல் அவ்விதம் ஆக்கப்படவில்லை. இடப்பெயர்வு முடிந்த கையோடு அவசரம் அவசரமாக எழுதப்பட்டுள்ளது.

★ 1995 ஒக்ரோபர் 30ம் திகதி வலிகாம இடப்பெயர்வு ஆரம்பமானது.

★ 1996 ஏப்ரல் 19ம் திகதி தென்மராட்சிக்குள் இராணுவம் புகுந்து இடம்பெயர்ந்தோரை திரும்பிச் செல்லும்படி கேட்டது.

★ 1996 நவம்பரில் யாழ்ப்பாண இடப்பெயர்வு நூலை அச்சேற்றுகின்றார். (புத்தகத்தை அதற்கு முன்னரே எழுதிவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது)

இடப்பெயர்வு முடிவுக்கும் - நூல் அச்சேற்றத்திற்கும் இடையில் கழிந்த ஆறு மாதங்களும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் நிலை எப்படி இருந்தது என்று பார்ப்போம் ... குடாநாட்டு மக்களை மண் அணைகளாலும்- சோதனைச்சாவடிகளாலும் – ஊரடங்குச்சட்டங்களாலும் - சுற்றிவளைப்புக்கள் - தேடுதல்களாலும், படையினர் அடைத்துவைத்தனர்.

★ இந்தச் சூழலில் இந்த நூலை எழுதுவதற்கேற்ற பல தரவுகளை நூலாசிரியர் எப்படிப் பெற்றார்?

★ இடப்பெயர்வின் அரசியல் – இராணுவ - உயிர்காப்பு பரிமாணங்களைத் தவிர்த்துவிட்டு மக்களின் துன்பங்களை மட்டும் எழுத நூலாசிரியரைத் தூண்டிய காரணி எது?

இடப்பெயர்வின் அரசியல் – இராணுவ பரிமாணங்களைப் பார்க்கும் நிலையில் நூலாசிரியர் இல்லாது விட்டாலும், உயிர்காப்பு அம்சத்தை நூலில் குறிப்பிடத்தவறியது நூலாக்கத்தின் நோக்கத்தை கேள்விக்குறியாக்குகின்றது.

'ரிவிரச'விற்கு முன்னர் நடந்த 'முன்னோக்கிப்பாய்தல்' நடவடிக்கையில் மட்டும் சுமார் 300 பொதுமக்கள் படையினரால் கொல்லப்பட்டிருந்தனர். இதேநேரம் இந்த படை நடவடிக்கையில் 200 படையினர் பலியாகியிருந்தனர். 100 புலிவீரர்கள் வீரச்சாவடைந்திருந்தனர். ஆனால், முப்பதினாயிரம் மக்களாவது கொல்லப்படலாம் என்ற கணிப்பில் தொடங்கப்பட்ட ரிவிரச, 3மாதங்கள் தொடர்ந்து நடந்தது: இந்தச் சமரில் 700 படையினர் கொல்லப்பட்டிருந்தனர்.424 புலிவீரர்கள்வீரச்சாவடைந்திருந்தனர் ஆனால், 58 பொதுமக்கள் மட்டுமே பலியாகியிருந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் இடப்பெயர்வு நடைபெற இருந்த நாளிற்கு முன்னர்வந்த ஒரு சில நாட்களில் பலியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இடப்பெயர்வு உயிர்அழிவை தடுத்தது என்ற வெளிப்படையான உண்மையையே நூல் வெளிப்படுத்தவில்லை. இதேவேளை, இடப்பெயர்வு முடிந்த ஒரு வருட காலப்பகுதியில் குடாநாட்டில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் – படையினரால் அடையாளம் தெரியாதவாறு புதைக்கப்பட்டனர் என்ற உண்மையையும், நாம் கருத்திலெடுக்க வேண்டும்.

வீடுமனைகளைக் கைவிட்டு-சொல்லொணாத் துன்பங்களை எதிர்கொண்டு வலிகாமத்தின் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்தோடக் காரணமான இராணுவ அபாயத்தைப் புறக்கணித்துவிட்டு ..

இடப்பெயர்வால் போராட்டம் சந்தித்த அரசியல் ஆதாயங்களை ஏறெடுத்துப்பார்க்காமல்-

இடம்பெயர்ந்ததால் நடந்த உயிர்காப்பு அம்சத்தை அசட்டை செய்து விட்டு –

இடப்பெயர்வில் மக்கள் சந்தித்த சில துன்ப துயரங்களை மட்டும் பதிவு செய்த ஒரு பயனற்ற– அதேவேளை போராட்டவிரோதிகளுக்குத் தற்காலிக பயன் கொடுக்கக்கூடிய நூலாகவே ''யாழ்ப்பாண இடப்பெயர்வு'' உள்ளது.

(04 ஆம் பக்கத்தொடர்ச்சி)

## இலக்கைத்...


கரும்புலி மேஜர் குமுதன் அண்ணரின் கட்டளை எம்மை வேகமாய் பின்நோக்கி நகர வைத்தது. குளித்துக் கொண்டும் மரம்தறித்துக் கொண்டும், ஹெலியில் பொருட்கள் இறக்க வந்து நின்றவர்கள், ஒருவரையுமே காணமுடியவில்லை. திடீர் அதிர்ச்சியால் சிலர் செத்துக்கூட இருக்கலாம்.

நீண்ட நேரத்துக்கு பின்னர்தான் எதிரிக்கு நின்று போன மூச்சு மீண்டும் வந்திருக்க வேண்டும். ஏனெனில் அதன்பின்தான் எதிரியோடு சேர்ந்து எறிகணைகளும் எறிகுண்டுகளும் ரவைகளும் எம்மைத் துரத்திக்கொண்டிருக்க, MI. 24 தாக்குதல்வானூர்தியும் எம்மைத் தேடிக்கொண்டிருந்தது, அவர்களின் முகாமுக்குள்ளேயே அவற்றை எல்லாம் ஏமாற்றியபடி நகர்ந்தோம். அன்று இரவு 12 . 40 மணிக்கு எதிரியின் முன்னணிக் காவல் நிலைகளைக் கடந்து முட்பற்றைக்குள் தங்கினோம்.

பொரித்த அப்பளத்தை தண்ணீரில் நனைத்தால் எப்படி இருக்குமோ அப்படித்தான் எல்லோருடைய காலும் அவிந்து கிடந்தது. சிலருக்கு புண்கள் கூட வந்துவிட்டன. அந்த ரண வேதனையோடுதான் நகர்ந்தோம். இப்படியாக 60 கி.மீ தூரத்தை இராணுவப்பிரதேசத்துக்குள்ளாலேயே நடந்து – கடந்து எந்த இழப்பும் இன்றி இவ்வாண்டின் முதலாவது கரும்புலித் தாக்குதலை வெற்றிகரமாக மேற்கொண்ட உள்ளப் பூரிப்போடு வந்து சேர்ந்தோம்.

விடுதலைப்புலிகளின் எறிகணைத்தாக்குதலால் ஹெலி சேதமானதாய் செய்திகள் சொன்ன போது, சிங்கள அரசை நினைக்க பரிதாபமாக இருந்தது. அதையும் மீறி நகைச்சுவையாகவும் இருந்தது.— —

# பாவத்தின் கூலிகள்



கிருஷாந்தி கொலைவழக்கின் மரணதண்டனைக் கைதிகளை நீதி மன்றத்திலிருந்து அழைத்துச்செல்லும் காட்சி.

மனிதத்தின்முன் குனிந்து
மனச்சாட்சிமுன்னே நாணுகின்ற
பாவத்தின் கூலிகளே!
தலைநிமிர்த்தி முகத்திரை விலக்குங்கள்.
நீங்கள் கருவிகளே
எய்தவனிருக்க அம்பைமட்டும் நோவானேன்.
''வெள்ளாடியன் சேவல்கள்'' வேறென்ன செய்யும்?
உயிருருவல்தானே உங்களுக்கானது
இங்குமட்டுமல்ல எங்கும்தான்.
''செம்மணிக்கானவர்'' நீவிர்மட்டுமல்ல
இன்னும் பலர்.
அவர்கள் சிரித்தபடி எம்தெருவில்
ஆரோகணித்துத் திரிகின்றனர்.
விசாரணையுமில்லை
விலங்கிடப்படவுமில்லை
பாவத்தின் முதற்சம்பளம் உமக்கானது.
உங்களிருவரில்
தங்கையின் கைகளைக்கட்டியது யார்?
எவனடா கழுத்தை நெரித்தது?
புல்முளைத்துப்போனதா புதைகுழி?
இல்லை
நிலங்கிழித்து நிமிருவர் நாளை.
செம்மணியில் இன்னும் பலரெனச்
சொன்னவன் யாரடா?
செய்ததை மன்னிக்கமுடியாதெனினும்
சொன்னதற்கு நன்றி.

— புதுவை இரத்தினதுரை

# சிறுவையூன்றாச் சவக்காலை



கழுத்தை வளைத்த
சுருக்குக்கயிற்றைப் பழிதீர்க்க
துர்நாற்றம் மிகுந்த உண்மைகளை
✱ மண்தூர்த்தலைகள் கக்கின.

உண்மைகள்
காணாமல்போன மனிதர்களை பிணங்களாய் இனர்த்தின.
மண்ணகழ்ந்த இடங்குகளில் மனிதர்களை நிரவி
செம்மணிவயலில் சாவிளைத்த இராணுவச்சாகசம்
சந்திசிரித்தது.

உயிர்ப்போறை உரியுண்டு உயிர்சுண்டிய
எம்புருஷர் தேகப்பொதிகள்
செம்மணியின் கள்ளறையுள்ளிருந்து புகைந்தன.

வனப்புமிகு எம் பெண்டிர்
தசைபுசித்த வெறியுடல்கள்
தசைகுளிரும் பொழுதுவரை புசித்த
தசைவெறி உடல்கள்
செம்மணியின் பசியமண்ணில் பதனமிட்ட பிண்டங்கள்
தெருக்களில் சம்மணமிட்டு வார்த்தையாடின.

குழிகளில் புழுத்த
உடல்விளைந்த வயிறுகளின்
ஒப்பாரிப்பாடல்பெற்ற ஸ்தலமாயிற்று செம்மணி.

உடலை சூடிச் சுடர்ந்த செம்மணியின்
சிறுவையூன்றாச் சவக்காலைக் குரூரம்
மனங்களைத் தின்கிறது.

எம்பிச்சிறையொன்றுள்
உயிரைக் கிடுக்கிக் கிடக்கும் என்ற
குருதித்துயர் தேற்றலில்
அழுகைகுருதி நாறிற்று.

கன்னிவெலாற்றிய தாலிகள் அறுந்தன.
சுமந்த சூலறைகள் கருவழிந்தவாறாய்க் கலங்கின.
உண்டியொழிந்த
வயிறுகண்ட தோற்ற தோன்புகள் பொய்த்தனவா?

பிணவிச்சம் சுமழ 'வெட்டியான்'கள் பவனிவருகிறார்கள்.
எந்த ஒப்பனைகளாலும் முடியவில்லை
சவங்களை பொருந்திய முகங்களைச் சிங்காரிக்க.
வயல்வெளிகளில் இடுகாட்டின் அமைதியுறைகிறது.
சொப்பனங்கள் வியர்க்க
நெற்குலைகள் பிணங்களாய் வாசமிடுகின்றன.
நடுநிசியான பல்லிடுக்கில் கந்தலாய்க்கிழிகிறது இருப்பு.

சிறுவையூன்றாச் சவக்காலைக்கிரையாகுமோ வாழ்வு?
வாழ்வைச் சப்புகிறது எண்ணம்!

— எஸ். உமாஜிப்ரான்

---

✱ படையினன்
லான்ஸ் கோப்ரல் டி. சோமரட்ண ராஜபக்ஷ